பாரத மணி

“ உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் ”

—பாரதி

ஆசிரியர் : கா. சி. வேங்கடரமணி.

மாலை 4	ஞாயிறு 21-4-40 விக்ரம௵ சித்திரை௴ 9௳	முத்து 3

பொருள் அடக்கம்

விஷயம்					பக்கம்
உலக வர்த்தமானம்	...	...	...	...	74
அதிகப் பிரஸங்கம்	...	...	...	...	76
நாம் பறித்த புஷ்பம்	...	...	...	...	78
உதிர்ந்த மணிகள்	...	...	...	...	79
இது தெரியுமா?	...	...	...	...	80
நம் கிராமங்கள்	...	...	...	நீலு. ராமஸாமி	81
பிறவிக் குருடன்	...	...	...	எஸ். ஆர். ஆதிமூலம்	85
எனது பண்ணை	...	...	...	டி. ராஜகோபாலன்	86
கல்வி	...	...	...	ஆர். பங்காருஸ்வாமி	87
தாய் நாடு	...	...	...	எஸ், சங்கரன்	88
வேடிக்கை சம்பவங்கள்	...	...	...	டி. எஸ். ரமணி	91
சிறுவர் பகுதி	...	...	...	டி. வேங்கடராமன்	92
ஸ்வேதாரண்ய ஆச்ரம பால பாடம் (1)		...	...	கா. சி. வேங்கடரமணி	95
தமிழ் வருஷப் பிறப்பு	...	...		எல். என். குபீல் சுந்தரேசன்	96

“ பாரத மணி ” யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் குறிப்பிடும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

உலக வர்த்தமானம்

சென்ற வாரம் ஐரோப்பிய யுத்தத்தில் ஒரு முக்கியமான இடம் பெறுவதாகும். வெகு நாட்களாகவே, நார்வே, ஸ்வீடனுடன் ஜெர்மனியின் வியாபாரத்தைத் தடுக்க பிரிட்டன் முயன்று வந்தது. இந்நிலையில் ஹிட்லர் நார்வேயையும் பிடித்துக் கொள்ளத் துணிந்தார். நேசநாடுகள், நார்வே கடற்கரையில் கடற் கண்ணிகளைப் போட்டனர். உடனே ஜெர்மனி முந்திக் கொண்டு, அதிவேகமாய் டென்மார்க்கைப் பிடித்துக் கொண்டு, நார்வே மேலும் படையெடுத்தது. பிரிட்டனும் நார்வேக்கு உதவி செய்ய முன்வந்து, கப்பற்படையை அனுப்பியது. அதற்குள் ஜெர்மனி, நார்வேயில் முக்கியமான டவுன்களைப் பிடித்துக் கொண்டு ஒரு பொம்மை சர்க்காரையும் நியமித்தது. நார்வேயின் உண்மைப் பழைய சர்க்கார் இடம் விட்டு இடம் மாறி, இப்பொழுது இருக்குமிடம் தெரியவில்லை. ஆனால் ஆங்காங்கு ஜெர்மன் சேனைகள் எதிர்க்கப்பட்டு வருகின்றன. அதோடு பிரிட்டிஷ் கடற்படையும் நார்வேயின் முக்கியமான 'போர்ட்' நார்விக்கைக் கைப்பற்ற முயன்றுவருகிறது. நார்வே கரைநெடுக நிறுத்தப்பட்டுள்ள ஜெர்மன் கடற்படையை, நேசநாட்டுக் கப்பற்படை வளைத்துக் கொண்டுள்ளதாம். இருந்தாலும், மொத்தத்தில் ஜெர்மனி முன்னேறி வருவதாய்த் தெரிகிறது.

இந்த யுத்தத்தினின்று தாங்கள் விலகி, நடுநிலைமையே வகிப்பதாயும், ஆனால் எவராவது தாக்கினால் தற்காப்பை முன்னிட்டுத் தயங்காதென்றும் ஸ்வீடன் அறிவித்துள்ளது. ஹாலந்து, பெல்ஜியமும் தம்தம் நடுநிலைமையை வற்புறுத்தியுள்ளன. பிரிட்டன் இச்சிறு நாடுகளைக் காக்க உதவி செய்யுமென்றும், நார்வேயை மீட்குமென்றும், சேம்பர்லேன், ஹாலிபாக்ஸ் முதலியோர் பேசியுள்ளனர்.

மத்தியதரைக் கடலில் இத்தாலிய கடற்படை நடமாட்டம் சந்தேகத்திற்கிடமாயுள்ளதாம். அங்குள்ள நேச தேசக் கப்பற்படையை வடகடலுக்குக் கொண்டு போகாமலிருக்கவே இப்படிச் செய்வதாக யூகிக்கப்படுகிறது. அதோடு ஸீனர், காய்டா, பிரான்சைப் பயமுறுத்தி எழுதியுள்ளாராம். இத்தாலியைவிடக் குறைந்த ஜனத்தொகையுள்ள பிரான்ஸ் அட்லான்டிக்கிலும், மத்தியதரைக் கடலிலும் ஆதிக்கம் செலுத்துவதைத் தாங்கள் சகிக்க முடியாதாம்.

நியூயார்க் நிருபர் ஒருவர் முக்கியமான ரகசியத்தை வெளியிட்டுள்ளார். அமெரிக்க, பிரிட்டிஷ் யுத்தக் கப்பல்களை விடப் பெரியதும், அதிக வலுவும் வாய்ந்த நாசகாரிகளை ஜப்பான் கட்டி வருவதாகக் கூறுகிறார். இவை 40,000, 50000 டன் கப்பல்களாம். டச்சுக்காரரின் கிழக்கிந்தியத் தீவுகள், ஐரோப்பிய யுத்தத்தின் பயனாகப் பிறர் கையில் விழக் கூடாதென்று ஜப்பான் கருதுவதாயும், அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமென்றும் கூறப்படுகிறது. இவ்விஷயம் பிரிட்டன், பிரான்ஸ், இவைகளையே பாதிக்குமாதலால், அவை முன் ஜாக்கிரதை செய்துகொள்ளுமென்றும், அமெரிக்காவுக்கு அவ்வளவு அதிக சிரத்தையில்லையென்றும், அமெரிக்க அரசியல் நிருபர்களிடையே பேச்சாயுள்ளது.

உள்நாட்டில்

ஜின்னாவின் 'பாகிஸ்தான்' திட்டத்திற்கு எங்கும் எதிர்ப்பு காணப்படுகிறது. சீக்கியர்களும், ஹிந்து மகாசபையும், மிதவாதிகளும், லீகரல்லாத இதர முஸ்லீம்களும் இதைக் கண்டிக்கிறார்கள். காங்கிரஸ் இதைக் கண்ணெடுத்தும் பார்ப்பதில்லை. இவ்வளவு அசட்டுத்தனமான திட்டம் போடும் ஜின்னாவுடன் சமரசப் பேச்சுக்களைக் காங்கிரஸ் நடத்த முடியாதென்று நேருஜீ கூறியுள்ளார்.

இந்தியாவைப்பற்றி ஜெட்லண்ட் பேசுகையில், வகுப்பு ஒற்றுமை கிட்டிய பிறகுதான் எத்தகைய அரசியல் அபிவிருத்தி

யையும் பெறமுடியுமென்றும், இதற்காகத் தங்களாலான முயற்சிகளைச் செய்வதாயும் கூறியுள்ளார். காங்கிரஸ் கோரிக்கையை ஒதுக்கித் தள்ளவே இப்படிச் செய்கிறார்களென்றும், வகுப்பு ஒற்றுமைக்கு அரசியல் நிர்ணய சபையே தகுந்த சாதனமென்றும், நாட்டைக் கூறுபோடும் பிரச்னையையும் அச்சபைதான் தீர்மானிக்கக்கூடியதென்றும் ராஜாஜி கூறுகிறார்.

மத்திய சர்க்காரும் காங்கிரசும் ஒரு சமரச முடிவுக்கு வரவேண்டு மென்று, ஸ்ரீ ஆனே முயன்று வருகிறார். ஆனேயின் 'கமிட்டி திட்டத்தை' மாளவ்யாஜியும் ஆதரித்துள்ளார்.

தற்போது கூடி ஆலோசனையிலீடுபட்டிருக்கும் காங்கிரஸ் காரியக் கமிட்டி பல முக்கியமான விஷயங்களைக் கவனித்துள்ளது. ஒரு மாதர் டிபார்ட்மெண்ட் ஏற்படுத்தி, அ. இ. கா. கமிட்டி ஆபீஸிலேயே ஒரு பெண் காரியதரிசிக்குக் கீழ் வேலை செய்ய, ஏற்பாடாகியுள்ளது. இன்னும், பல மாகாணங்களிலும் தற்போதிருந்து வரும் தொண்டர் படைகளைப் பற்றித் தகவல் சேகரிக்கும்படி ஸ்ரீ. ஆர். எஸ். பண்டிட் நியமிக்கப்பட்டுள்ளார். இது காங்கிரஸின் பிற்கால உபயோகத்திற்கு வேண்டிய அனுபவ அறிவைத் திரட்டவேயாகும். மேலும், தற்போது காங்கிரஸ் கமிட்டிகளெல்லாம் ஸத்தியாக்கிரஹக் கமிட்டிகளாய் மாறி வருகின்றன. இதைப்பற்றியும் ஒரு தீர்மானம் நிறைவேறுமென்று தெரிகிறது. இத் தீர்மானத்தின் போக்கை ஒருவாறு ஊகித்து 'யு. பி' நிருபர் தெரிவிப்பதாவது: "காந்தீய நிர்மாண திட்டத்தையும் ஸத்தியாக்ரக முறையையும் ஒத்துக்கொள்ளாதவர் காங்கிரஸ் கமிட்டிகளிலிருந்தே விலகி விடுவது நலமாயிருக்கும். பூர்ண சத்தியாக்கிரஹிகளும், இதில் அனுதாபம் காட்டுவோரும் போக, மற்ற விரும்பப்படாத நபர்கள் விலகிக் கொள்வதே சரி......"

சட்ட சபை, ஜில்லா போர்ட், முனிஸிபாலிடி இவைகளினின்றும் கூடிய சீக்கிரத்தில் காங்கிரஸ் அங்கத்தினர் விலகும்படி நேரலாமென்று, ராஷ்டிரபதி ஆஸாத் பேசியுள்ளார். இப் போக்கிற்குப் பல காங்கிரஸ் வாதிகளிடமிருந்து ஆக்ஷேபனை கிளம்பியுள்ளது குறிப்பிடத் தக்கது.

பம்பாயில் ஒரு மாதமாக சுமார் ஒன்றரை லட்சம் தொழிலாளர் நடத்திவந்த ஸ்ட்ரைக் முடிந்தது. பம்பாய் காங்கிரஸ் சிரத்தை காட்டாததும், முதலாளிகள் பிடிவாதமா யிருந்ததும், தொழிலாளருக்கு வேறு வழியில்லாமல் போய்விட்டது. தவிர, அவர்கள் எதிர்பார்த்தபடி உணவுப் பொருள் விலைகள் அவ்வளவு அதிகரிக்காததால், முதலாளிகள் ஒத்துக்கொண்ட 10 சத விகித உயர்வு (சம்பளத்தில்) போதுமானதாயிருக்கும்.

பம்பாய் மதுவிலக்குச் சட்டம், மாகாண சட்ட சபைகளின் ஆதிக்கத்திற்குட்படாததென, ஹைகோர்ட் தீர்ப்பு செய்தது. உடனே, கவர்னர் தமது விசேஷ அதிகாரத்தைச் செலுத்தி அதை நிலை நிறுத்தியுள்ளார்.

வங்காளத்தில் 6 மாத காலத்திற்குப் பொதுக் கூட்டங்கள் கூடாதென்று உத்திர விட்டிருக்கிறார்கள். வங்காளத்திலும், வெளி மாகாணங்களிலும் பிரபல 'முன்னேற்றக் கட்சி'க்காரர்கள் இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரெஸ்ட் செய்யப்பட்டுள்ளனர்.

பஞ்சாபில் கொஞ்ச காலமாய் காக்ஸார்கள் இயக்கத்தின் ஆர்ப்பாட்டம் வலுத்து வருவது வாசகர்களறிந்ததே. ஹிட்லரின் இயக்கத்தைப் போன்று இது ஆயுதம் தாங்கி அட்டகாசம் செய்கிறது. இதை அடக்க ஸர். ஸிக்கந்தர் சட்ட பூர்வமான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டார். இத் தடைச் சட்டத்தை வாபீஸ் வாங்க வேண்டுமென்று லாகூரில் கூடிய முஸ்லிம் லீக் தீர்மானித்து, ஸிக்கந்தருக்கு அறிவித்தது. ஆனால் ஜின்னாவின் மிரட்டலுக் கிணங்காமல், ஸர். ஸிகந்தர் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். ஆயுதம் தாங்குவதைக் கைவிடவேண்டுமென்றும், வெளி மாகாணங்களிலிருந்து வந்த இப் படையினர் திரும்பிச் செல்லவேண்டுமென்றும், மற்றவரும் கலைந்து வீடு திரும்பினால், இவ்வியக்கம் சட்ட விரோதமானதென்ற தடை உத்தரவை நீக்குவதாகக்கூறுகிறார்.

அதிகப் பிரஸங்கம்

★ "ஆதௌ வருஷாரம்பத்திலே" ★

ஆதௌ வருஷாரம்பத்திலே, "பன்கிசிடியாம்" மெட்டில் புது வருஷக் கதம்பம், "பூ - பூ - பூ" (Pooh Pooh) என்று பூத்தது. ஒரு தடவை அல்ல. இரண்டு தடவை பூத்தது. முதல் தடவை மிஷின், பூக்க, தகரார் செய்தபிறகு இரண்டாம் தடவை சரியாகப் பூத்தது. கதம்பத்தின் புது வருஷ ஸங்கல்பங்களாவன :—புது வருஷத்தில் (1) "ஓசிப்பொடி" போடக் கூடாது, காசு கொடுத்துத்தான் வாங்கிப் போட்டுக்கொள்ள வேண்டும். (2) மனைவி கேட்பது என்ன வென்று நன்றாக அறிந்த பிறகுதான் அதை வாங்கிக் கொடுக்க வேண்டும். "பூ" வேண்டுமென்றால் "வாழைப்பூ" வாங்கிவரக் கூடாது. (3) மனைவியில்லாத ஸமயத்தில், பேச்சில் வீரப் புலியாய் விளங்க வேண்டும். ஆனால் அவள் குரல் கேட்டதும் பொட்டிப் பாம்பாய் அடங்கி நடக்க வேண்டும். (4) மாணவர்களை மாத்திரம் பெஞ்சியின்மீது ஏற்றக்கூடாது. அவர்களுடன் கூட உபாத்தியாயர்களும் ஏறிவிளையாட வேண்டும். இவ்விதமான புத்திகளைப் புது வருஷக் கதம்பத்தில் "சிட்டி" திருச்சி ரேடியோ மூலமாகப் புகட்டினார்.

இவைகளி லிருந்து நான் அறிந்து கொண்ட விஷயங்களாவன :—(1) சிட்டி படிக்கும் பொழுது அடிக்கடி பெஞ்சியின் மேல் எற்றப்பட்டார். இல்லாவிட்டால் உபாத்தியாயர்கள் மீது இவ்வளவு கோபம் அவருக்கேன் ? (2) மனைவியைக் கண்டால் சிட்டிக்கு ஸிம்ஹ சொப்பனம். அதனால் தான் கதம்பத்திலும், வீட்டில் நடப்பதையே எழுதிவிட்டார். (3) அவர் மனைவியின் க்ண்கள் சரியாக இல்லை. அதனால் தான், அவள் இல்லாத இடத்தில், தைரியமாக முத்தம்மாளின் கண்களை "ஹரிகேன்" லைட்டுகளுடன் ஒப்பிட்டார். (4) கூவம் நதிமேல் அவருக்கு அபார அன்பு. (5) அவர் மனைவி ஹார்மோன்யம் வாசிக்கிறாள். (6) அவர் வீட்டில் பிசாசுகள் (அவர் மனைவியைத் தவிர) ஒன்றும் கிடையாது. ஏனென்றால் அவர் வீட்டில் ஹார்மோன்யம் இருக்கிறதல்லவா ? (7) வைரக் கடுக்கன்களும் ஜவ்வாதும் வாங்க அவரிடம் பணம் கிடையாது. பாகவதர்கள் மீது அவர் ஆத்திரப்படுவானேன் ? (8) இழவிலும் சாவிலும் அவருக்குப் பிரியம் அதிகம். இல்லாவிட்டால் "செத்துப்போகிறேன், இழவு, ஐய்யய்யோ" என்ற வார்த்தைகள் "புது வருஷ"க் கதம்பத்தில் அடிக்கடி வருமா ? (9) அவர் வீட்டில் ரேடியோஸெட் கிடையாது. இருந்தால் இதை எல்லாம் அவர் மனைவி கேட்டுவிட மாட்டாளா ? அப்புறம் அவர் புது வருஷக் கதம்பம் எழுதுவதேது, இழவேது ? (சிட்டியைக் கேட்ட தோஷம்) இந்த உண்மைகளை எல்லாம் எழுதிய என் மானத்தைக் காப்பாற்ற, உண்மையில் அவருக்கு மனைவியில்லாவிட்டாலும், பொய்யாகவாவது மனைவி இருக்கிறாள் என்று சிட்டி ஸத்யம் செய்வார் என்று நம்புகிறேன். இல்லாவிட்டால் ஒவ்வொரு வருஷமும் இம் மாதிரியே "புது வருஷக் கதம்பம்" எழுத வேண்டுமென்று கொடுஞ்சாபம் கொடுத்து விட மாட்டேனா ?

இவ்விதமாக ஆரம்பித்த புது வருஷத்தில், திவான், ஸர். ஷண்முகம் செட்டியார்,

கான்பஹதூர் கலிபுல்லா ஸாஹிப், பூஜ்ய மேயர் ஸத்தியமூர்த்தி, ஆகிய திருமூர்த்திகளிடமிருந்து வந்த செய்திகளை, இசைத் தட்டுகளுக்குப் பதில் வெட்டுகளான, "பேச்சுத் தட்டுகள்" மூலம், திருச்சி நிலையத்தார் ஒலி பரப்பினார்கள். திவான் ஸாஹிப் அவர்கள், தமிழின் பெருமையைத் தொல்காப்பியம், சிலப்பதிகாரம் முதலிய காப்பியங்களின் ஸாக்ஷியத்தால், நிரூபித்தார். தமிழர்களாகிய நாம், வெற்றி வீரரால் காவேரிப்பூம் பட்டிணத்தில் (பாரதமணி ஆசிரியரின் ஊர்!) ஆண்டு வந்த சோழ மன்னர்களின் சந்ததிகளே, என்று "நாமில்" தன்னையும் சேர்த்துக் கூறித் தமிழரின் பெருமையை விளக்கினார், கான்பஹதூர் ஸாஹிப் அவர்கள். பூஜ்ய மேயர் தமிழில் உள்ள ஸம்ஸ்கிருத வார்த்தைகளை ஸம்ஸ்கிருதமாகவே உச்சரிக்க வேண்டுமென்ற கவலையில், மனிதன், புனிதம் என்ற வார்த்தைகளில் உள்ள 'த'வை 'dh' என்று நன்றாக அழுத்திப் பேசினார். இவைகள் எல்லாம் சரியான தமிழ் அல்ல. தான் பேசுவது தான் சரியான தமிழ் என்று காட்ட, கிராமவாசிகளுக்கான நிகழ்ச்சியில் ஒருவர் கடுந்தமிழில் சொற்பொழிவு பொழிந்தார்.

இப்புது வருஷத்தில், வாரத்திற்கு 8 அல்லது 7 நாட்களும், வருஷத்திற்கு 13 அல்லது 12 மாதங்களும் இருக்கலாம் என்று தோன்றுகிறது. இல்லாவிட்டால், M. D. பார்த்தசாரதியும், ஸ்ரீமதி பகவதியும் பாடிய "புது வருஷமே" என்ற பாட்டில், வாரத்திற்கு 7 நாட்கள், வருஷத்திற்கு 12 மாதங்கள் என்று பாடியதற்கு, பின்னணி சங்கீதத்தில், ஸ, ரி, க, ம, ப, த, நி, என்றவைகளின் ஸப்தஸ்வரங்களால் 7 நாட்களையும், ரி, க, ம, த, நி, என்றவைகளின் இரு பிரிவுகளையும், ஸ, ப, வையும் சேர்த்து 12 ஸ்வரங்களால், 12 மாதங்களையும் குறிக்கும்பொழுது, முதல் தடவையில் மேல் 'ஸ'வையும் சேர்த்து முறையே 8 ஆகவும், 13 ஆகவும் வாசித்துப் பிறகு திருப்பி வாசிக்கும்பொழுது அந்த மேல் ஷட்ஜத்தை விட்டு விட்டு, முறையே 7 ஆகவும் 12 ஆகவும் வாத்ய கோஷ்டியார் வாசிப்பார்களா?

இவ்விதமான வருஷத்தைச் சங்கீதநாடகமாக "விக்ரம வருஷம்" என்று கொண்டாடினார்கள். கொண்டாட்டமென்றால், "கொம்மாளம்" என்பதைத் தெளிவாக இந்நாடகத்தால் எடுத்துக் காட்டினார்கள். மணிகள், சங்கு, தாரை, தம்பட்டம், மேளம், இவைகளின் சப்தத்துடன் வாத்ய கோஷமும், மனித கோஷமும் நிறைய இருந்தன. இடையிடையே சில வார்த்தைகளும் காதில் விழுந்தன. இவ்விதம் விழுந்தவைகள்தான் புரிந்தன. மற்றவைகளின் தலை கால் தெரியவில்லை. உடலும் புரியவில்லை. இவை தெரிந்தும் புரிந்துமிருந்தால் சங்கீத நாடகம்............இருந்திருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

இவ்விதம் திருச்சி ரேடியோவில், புது வருஷக் கொண்டாட்டம் வெகு விமரிசையாக, கதம்பமாக ஆரம்பித்து, கதம்பமாக நடித்து, கதம்பமாகவே முடிந்தது. ஆகௌ வருஷாரம்பத்திலே, கீர்த்தனாசாரியார் சொல்லிய விதமே, "பன்கிசிடியாம்', மெட்டில் "பூவாக" பூத்த இப்புது விக்ரம வருஷத்தில் "பொங்கும் மங்களம் எங்கும் பொங்குக," வாழ்க தமிழ், வாழ்க தமிழர், வாழ்க தமிழகம், "அதிகமாய் வாழ்க அதிகப் பிரஸங்கிகள்."

—அதிகப் பிரஸங்கி

இடம் மாற்றம்

பாரத மணி காரியாலயம் மைலாப்பூரிலிருந்து 295, லிங்க செட்டித் தெருவுக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

மானேஜர்.

நாம் பறித்த புஷ்பம்

ஜப்பானியப் பெரும் பண நிலையங்கள்

இப்பெருங் கம்பெனிகளில் இருவகையுண்டு. ‘நிஸ்ஸான்’ கம்பெனியைப் போன்றவை அதிக ஆஸ்தி பெற்றிருந்தாலும் பெரும் பணமுதலைக் கொண்டு பற்பல தொழில்களிலும் ஆதிக்கம் கொண்டவையல்ல. ‘மித்ஸு’ ‘மித்ஸுபிஷி’, ‘ஸுமிடோமோ,’ ‘யாஸுதா’ முதலியவை பெரும் பண நிலையங்களாகும். இவையுள் ‘யாஸுதா’ சிற்சில தொழில் நிலையங்களில் முதல் போட்டுள்ள வெறும் பண நிலையமாகும். ‘மித்ஸு’வின் ஆஸ்தி, ‘மித்ஸுபிஷி’யினுடையதைப்போல் ஒன்றரை மடங்கும், ‘ஸுமிடோமோ’ வினதைப்போல் நான்கு மடங்குமாகும். ஆனால் இக்கம்பெனிகளின் பொருளாதார, அரசியல் ஆதிக்கம் இவைகளின் ஆஸ்தியினால் மட்டும் அளவிடப்படாதது. பாங்குகளில் மித்ஸுவும் மித்ஸுபிஷியும் ஏறக்குறைய, ஒரேயளவு அதிகாரம் பெற்றுள்ளன. ‘ஸுமிடோமோ’வும் இவைகளுக்கு அதிகம் குறைந்ததல்ல. ‘யாஸுதா’வோ வென்னில், ‘மித்ஸு’வைப்போல் இரண்டு மடங்கு பாங்கி முதலுள்ளது. ‘இன்ஷூரன்ஸ்’ கம்பெனிகளில் ‘மித்ஸுபிஷிக்குத்தான் ஆதிக்கம் அதிகம். பாங்கு, இன்ஷூரன்ஸ் இரண்டிலும் சேர்ந்து மித்ஸுபிஷி’க்கு மித்ஸு, ஸுமிடோமோவைப் போல் இரண்டு மடங்கும், யாவஸுதாவுக்குச் சமமாயும் ஆஸ்தி முதல் உள்ளது. ஜெர்மனியில் நடப்பதைப்போல் புது கம்பெனிகளின் முதலில் பங்கு எடுத்துக் கொள்வதில்லை ஜப்பானிய பாங்குகள். ஆனால் ஆங்கிலேய பாங்குகளைப்போல், குறைந்த காலக் கடன்தான் கொடுப்பதென்ற நியதியில்லை. கம்பெனிகளின் ‘பாண்டு’களை (கடன் சீட்டுகள்) இவை வாங்குவது சகஜம். இதனால் இப்பாங்குகளின் ஆதிக்கம் பெருகுவது இயற்கை தானே? முதல்தரமான தொழிற் சாலைகளில் தான் இவை முதல் போடும். கப்பல் வியாபாரம், கப்பல் கட்டுதல், இன்ஷூரன்ஸ், உணவுப்பொருள், இவைகளில் மித்ஸுபிஷி முன்னேறி யுள்ளது. இதன் ஆதிக்கத்திலுள்ள 120 கம்பெனிகளில் 50-ல் வெகு சொல்பமுதலும், அதிகாரமும் தானுண்டு. ‘மித்ஸு’ நிலையம் சுரங்கவேலை, நூல் நெசவுச் சரக்குகள், பொது வியாபாரம் இவைகளில் முக்கியஸ்தானம் பெற்றது. இதன் 130-கம்பெனிகளில் 20-ல் குறைந்தமுதலே வினியோகிக்கப் பட்டுள்ளது. ஆரம்பத்தில் ‘மித்ஸுபிஷி’ முன்னோக்கமுள்ளதாய், அலட்சியமாய்ப் பல புதுப்பாதைகளில் பிரவேசித்தது. ஆனால் வரவர நிதானப் போக்கு அதிகமாயிற்று. அதனால் மிகவும் பிற்போக்கான கொள்கையுடையதெனவும் கூறப்படுகிறது. கப்பல் தொழிலில் சிரத்தைகொண்ட இது வெளிநாட்டுக் கொள்கையில் தீவிரமா யிருக்க முடியுமா? மித்ஸுபிஷிக்கும் அரசாங்கத்திற்குமுள்ள சம்பந்தத்தைக் கவனிப்போம். ஆதியிலிருந்து ஏராளமான சர்க்கார் உதவி பெற்று வந்துள்ளது. இந்நேர்முகமான பண உதவியைத் தவிர, யுத்த தளவாடங்களில் சர்க்காரிடமிருந்து அதிகப்பணம் பெறுகிறது. கப்பல் தொழிலிலும் சர்க்கார் ‘ஆர்டர்’ களிலிருந்து அதிக லாபம் பெறுகிறது. இதிலிருந்து இக்கம்பெனியின் அரசியல் ஆதிக்கத்தின் அளவு ஒருவாறு விளங்கும். இதைப் போன்ற கம்பெனிகளின் லாபத்திற்காகத் தான் யுத்தமும், வெளி நாட்டுச் சுரண்டலும் ஏற்படுகிறதென்றும் சொல்லுகிறார்கள். இவ்வகையில் பொது ஜனக் கண்டனம் அதிகரித்து வரலாயிற்று. 1935-ல் இந்நிலையம் புதுக் கொள்கையை மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டது. பண முதல் பங்குகளைப் (capital shares) பொது ஜனங்கள் சில்லறையாக வாங்குவதற்கு இடம் தந்தார்கள். பெரும் பணக்காரர்களே கொள்ளை லாபம் பெறுகிறார்களென்ற குற்றச் சாட்டிற்குப் பதிலாக இப்படிச் செய்வதாகச் சொல்லப்படுகிறது.

—ஈஸ்டர்ன் எகானமிஸ்ட்.

அறிக்கை.

சந்தாதாரர்கள் நமது காரியாலயத்துக்கு அனுப்பும் கடிதங்களில், அவரவர்கள் சந்தா நம்பரையும் குறிக்கவேண்டுமென்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மானேஜர்.

உதிர்ந்த மணிகள்

அறிவை குறுகிய பார்வையால் சில விஞ்ஞானிகள் பார்க்கிறார்கள். உலகம் விஞ்ஞான சாஸ்திரத்தால் உத்தாரணம் செய்யப்படும், விஞ்ஞான சாஸ்திரத்தின் அபிவிருத்தி வறுமை என்பதே தெரியாத ஓர் புது உலகத்துக்கு நம்மைக் கொண்டு செல்லும், என்கிற மாதிரி பேசுகிறார்கள். நான் விஞ்ஞான சாஸ்திரப் பயிற்சியில் நம்பிக்கை யுள்ளவன். ஆனால் எனக்குத் தெரிந்தவரையில் இலக்கியம் மாத்திரம் எப்படியோ, அப்படியே விஞ்ஞான சாஸ்திரம் மட்டும் இருந்தாலும் போதாது.

—ராபர்ட் லின்ட்.

* * *

மைனாரிட்டி, மெஜாரிட்டிப் பிரச்னைகளை வைத்துக்கொண்டு நம் தலைவர்கள் புரளி செய்வது சற்று அவர்களுக்கு உபயோகமாகவும் களிப்பாகவுமே இருக்கலாம். ஆனால் அதில் அர்த்தமே கிடையாது. இந்தப் புரளிகளைச் செய்வது கொஞ்ச காலம் கர்த்தாக்களுக்கு உபயோகமாகவும் லாபகரமாகவும்இருக்கலாம்.ஆனால் சிலரை சிலகாலம் ஏய்க்க முடியும். உலகம் முழுவதையும் எப்போதும் ஏய்த்துக்கொண்டே இருக்கலாம் என்கிற திட்டம் சாத்தியமானதல்ல.

—கிருஷ்ண காந்த மாளவியா.

* * *

"ஜனப் பிரதிநிதி சபையைக் கூட்டும் முறையையும், அதன் வேலையையும் சமரசப் பேச்சு வார்த்தையினால் நிர்ணயிக்கலாம். தேசியத் தற்பாது காப்பு, சுதேச ராஜாக்கள், பிரிட்டிஷ் வியாபாரப் பாதுகாப்பு, இவைகளில் இருநாடுகளுக்குமிடையே ஒருவித முடிவுக்கு வந்தபின், இந்த பிரதிநிதி சபையை, சிறுபான்மை வகுப்பாருக்கு நியாயமான பாதுகாப்புகளுடன் கூடிய இந்தியாவின் வருங்கால அரசியலமைப்பை நிர்ணயிக்கச் செய்யலாம்; அதன்முடிவை பிரிட்டிஷ் பார்லிமெண்ட் சட்டமாக்கலாம். பிரிட்டிஷ்காரர்கள் வெறும் பேச்சில் காரியத்தை மறப்பவரல்லர்; அனுபவப் போக்கையனுசரித்து நடப்பதில் பெயர் பெற்றவர்."

—ஸர். எஸ். ராதாகிருஷ்ணன்.

* * *

"யுத்தகாலத்திய நம் தொழில் முறை முன்னேற்றத்தில் மற்றொரு முக்கியமான அம்சம் கப்பல் தொழில் வளர்ச்சியாகும். இதுவரை நாம் அந்நியக் கப்பல்களில்தான் ஏற்றுமதி இறக்குமதி செய்து வருகிறோம். 150, 200 வருஷங்களுக்கு முன் நமக்கு வேண்டிய கப்பல்களைத் தயார் செய்ததோடு, கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வேண்டிய கப்பல்களையும் இந்நாடு கட்டித் தந்தது. வங்காளத்தில் வளரும் தேக்கு மரங்களினால் வலுவான வத்தைகளைச் செய்தது அக் கம்பெனி. அதோடு அக் காலத்தில் ஆங்கிலேயக்கடற்படையில் நம்நாட்டில்கட்டிய பல கப்பல்களிருந்தன. 'டிராஃபல்கார்'ல்நடந்த கடற்போரில் நெல்ஸன்உபயோகித்த கப்பல் மலபார் தேக்கினால் கட்டப்பட்டிதாகும்."

—டாக்டர் பி. ஜே. தாமஸ்

* * *

"இந்திய முஸ்லிம்களில் நூற்றுக்குத் தொண்ணூறவர், தாங்களோ தங்கள் மூதாதையரோ உண்மை மனமாற்றத்தால் இஸ்லாம் மதத்தைத் தழுவிய, இந்திய மக்களேயாவர். ஜனப் ஜின்னா 'பாதியா' வமிசத்தவர்; ஸர். சிகந்தர் ரஜபுத்திரக் குடும்பத்தினர்; நானும் ஹிந்துக்களாகிய 'லோஹனா' குடும்பத்தவன். எங்களில் நூற்றுக்குப் பத்துபேரே அராபிய, பாரசீக, மொகலாய வம்சத்தவராவர். ஆகையால் இந்திய நாடு, ஹிந்துக்களைப் போல், எங்களுக்கும் உரிய தாய் நாடாகும்."

—ஸர். அப்துல்லா ஹாரூன்

இது தெரியுமா?

உலகம் புகழாத வீரர்கள்

குளிர், பனி யென்றும் பாராது, மாதக் கணக்கில் தனிமையையே துணையாகக் கொண்டு, வன விலங்குகளைச் சமாளித்துக்கொண்டு, காலந்தள்ளும் 'இந்திய மெயில் ரன்னர்' இத்தகைய ஜீவன் ஆவான். வனப் பிரதேசங்களில் ஆறுகளையும், மலைகளையும் கடந்து, மாதக் கணக்கில் மனித வாடையே யின்றி, தன் 'மெயில் பேக்' உடன் ஓடுவதும்; மாரிக் காலத்தில் பனியினால் வழியெல்லாம் மூடப்பட்டு, பத்து தப்படிக்கு முன் ஒன்றும் தெரியாத நிலையில், இருட்டில் இடறி விழுவதும்; வேங்கையோ கரடியோ எதிர்ப்பட்டால் தன் ஈட்டி முனைத் தடியைச் சுழற்றியும், அதன் மணிகள் ஒலிக்கத் தாண்டவமாடித் தப்பியோடிடுவதும்; இவையெல்லாம் அவன் வாழ்க்கையில் சகஜமாகும். இடை இடையே இவன் விலங்குகளுக் கிரையாவதும் உண்டு. ஆனால் இவன்தான் சிறு கிராமங்களுக்கும், வெளியுலகத்துக்கும் இணைப்புச் சங்கிலி. இவனது விஜயம் சிறு கிராமங்களில் அரைநாள் விடுமுறைக்குக் காரணமாகும்.

அரைக்கோடி ரூபாய்க்கு ஒரே செக்

கிழக்கிந்திய ரயில்வே கம்பெனி 32 மைல் நீளமுள்ள ஒரு கிளைப்பாதையை, மைலுக்கு ஒன்றே கால் லக்ஷம் வீதம், அரைக்கோடி ரூபாய் கொடுத்து வாங்கியுள்ளனர். இதற்காக இப் பெருந் தொகைக்கு 'ரிஸர்வ்பாங்க் செக்' ஒன்றைக் கொடுத்தனர். ஒரே பட்டியலில் இப் பெருந் தொகை கொடுப்பது அதிசயமல்லவா?

மைசூரின் சமர்த்து!

மைசூர் சமஸ்தான மக்கள் மைசூர் சோப்புக்களைத் தேய்த்துக் குளிக்கிறார்கள்.

மைசூர் 'டவல்'களால் உடம்பைத் துடைத்துக்கொள்ளுகிறார்கள்.

மைசூர் ஸில்க் ஆடைகளை அணிகிறார்கள்.

மைசூர் எருக்களால் உரம் கொடுத்து பயிர் செய்யப்பட்ட பழங்களை சாப்பிடுகிறார்கள்.

மைசூர் சர்க்கரையுடன் மைசூர் காப்பியைக் குடிக்கிறார்கள்.

மைசூர் சிமிட்டி, மைசூர் மரச் சாமான்கள், மைசூர் இரும்பு, இவைகளைக் கொண்டு தங்கள் வீடுகளைக் கட்டிக் கொள்கிறார்கள்.

மைசூர் மரச் சாமான்களை வீடுகளில் உபயோகிக்கிறார்கள்.

மைசூர் காகிதத்தில் தங்கள் கடிதங்களை எழுதுகிறார்கள்.

1.	கம்பன் கவிதை	1	8	0
2.	வாழ்க்கையே வாழ்க்கை (எஸ். வி. வி.)	0	10	0
3.	காட்டூர் ராமு (சீதா ராமையர்)	1	0	0
4.	புதுமைப் பித்தன் கதைகள்	2	0	0
5.	சந்தனக்காவடி (கி.ஜ.ர.)	0	8	0
6.	விஷ விருக்ஷம் (கி. நா. குமாரஸாமி)	2	0	0
7.	துர்கேச நந்தினி (கு. ப. ரா.)	1	4	0
8.	கணையாழியின் கனவு (கல்கி)	2	0	0
9.	தேவதாஸ் (அ. கி. ஜயராமன்)	0	12	0
10.	மங்கையர்க்கரசியின் காதல் (வ. வே. சு. அய்யர்)	1	0	0

ஸ்வேதாரண்ய ஆச்ரம புத்தகசாலை,
295, லிங்க செட்டித் தெரு,
சென்னை.

நம் கிராமங்கள்

(நீலு. ராமஸாமி)

கிராமப் புனருத்தாரணப் பேச்சு வலுத்திருக்கும் இக்காலை அறிவாளி எவனும் அதை அலட்சியப்படுத்தல் முடியாது. எப்பொருளினுடையவும் காரண காரியத்தை அறிதலே மனித சமூகத்தின் அறிவு வளர்ச்சிக்கு அடிப்படையாகும். இம்முறையில் இப் பிரச்னையைச் சிறிது ஆராய்வோம். வேறுபட்ட பல காலதேச வர்த்தமானங்களுக் கொத்த முறையில் இதை அலசிப் பார்த்தல் அவசியம். தவிர, சமூகப் பெருக்கும், முன்னேற்றமும், அதன் பொருளாதார அமைப்பை அடிப்படையாகக் கொண்டுள்ளன. ஆதலின், நம் கிராமங்களின் நிலையை அறிய சரித்திரம், பொருளாதார தத்துவம், இவை இன்றியமையாத சாதனங்களாம்.

சமூக வளர்ச்சியைப் பல பாகுபாடுகளாகப் பிரிக்கலாம். அவையுள், நில ஆதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டது (Feudalism) ஒன்று. இவ்வமைப்பில், ஒரு தேசத்தின் அரசரும், பிரபுக்களும் அவரவருக்குக் கீழுள்ள நிலப்பரப்பின் அளவுப்படியே ஆள்பலமும், அரசியல் அதிகாரமும் உடையவராவர். இக்காலை வியாபாரம் அதிகம் முன்னேறியிராது. கிராமங்களில், சில சுதந்திரக் குடிகளைத்தவிர, மற்றவர் பிரபு வம்சத்திற்கு அடிமைகளாவர். இதே காலத்தில் சிற்சில நகரங்களிருந்ததெனினும், சமூக அடிப்படை, கிராமங்களே. கிராமத்தாரின் வாழ்க்கைச் சாதனங்களனைத்தும் அவ்வக் கிராமங்களிலேயே உற்பத்தி செய்யப்பட்டன. ஆனால் நாளடைவில் வியாபாரம் விருத்தியாகி, நகரங்கள் அமிதமாய்க் கிளம்பின. இதற்குள், கிராமங்களிலும் பழைய முறை மாறி, அனைத்தும் நாணய முறையில் கணக்கிடப்படலாயிற்று. இப்படியாக வெளிநாட்டு, வெளியூர் வியாபாரமும், நாணயச் செலாவணியும் கிராம வாழ்க்கையின் 'வேரில் வெந்நீர் வார்க்க'லாயின.

பிரபுக்களின் கொடுமை பொறுக்க முடியாமல் பண்ணையாட்கள் (Serfs) பலர் நகரங்களுக்கோடினர். வேறு சிலர் தங்கள் வேலைக்குப் பதில் பிரபுக்களுக்குப் பணம் கொடுத்துவிட்டுத் தத்தம் வேலையைக் கவனிக்கலாயினர். இப்படியாகக் கூலி அதிகரித்தும், கூலிக்கு ஆட்கள் கிடைப்பது அரிதாகியும் வந்தது. அதனாலும், வெளிநாட்டு வியாபாரம் வலுத்து வளர்ந்ததாலும், இங்கிலாந்தில் நிலப்பரப்பு பெரும்பாலும் ஆட்டுமந்தை வளர்க்க உபயோகிக்கப்பட்டது. இதனால் பிரபுக்கள் தங்கள் நிலங்களையும் ஊர்ப் பொது வெளிகளையும் வளைத்து வேலியிடலாயினர்.

அதற்கப்பால், நகரங்களில் காற்று, நீர், நிலக்கரி, இவைகளால் இயக்கப்படும் இயந்திர வளர்ச்சி அதிகரித்தது. இதனால் தங்கள் குடிசைக் கைத்தொழில்கள் பாழாக்கப்பட்ட கிராமக் குடிகள் வெகுவாய் வெளியேறி, நகரங்களில் ஜனத்தொகையை அதிகரித்தனர். நகரங்களிலிருந்து உணவுப் பொருட்களுக்குக் கிராக்கி யேற்பட்டது. அதோடு, பழைய விவசாய முறைப்படி பயிர்த்தொழில் புரிவதில் அதிகப் பொருள் நஷ்டமுண்டாயிற்று. பலரிடம் சிறு சிறு அளவில் நில உரிமை யிருந்ததாலும், நிலப்பரப்பில்மூன்

தியொரு பாகத்தை உரம்பெறுவதற்காகத் தரிசுபோடும் வழக்கத்தாலும், பண்டை முறைப்படி தொழில் புரிவதாலும், வரும் நஷ்டம் கணக்கிடற் கரியதாகும். நிலப் பரப்பெல்லாம் ஒருவரிடமிருந்து, அவை வேலியடப்பட்டு, புதிய முறையில் பயிர் செய்யப்பட்டால் அதிகப் பலன் கிடைப் பது திண்ணம். இக்நிலையில்தான் நகரங் களில் பெருந் தொழில்முறைப் புரட்சி யும், கிராமங்களில் விவசாயப் புரட்சியும் (agricultural revolution) தலையோங் கின. பிரபுக்கள் ஆதிக்கம்பெற்ற சட்ட சபைகளால் இயற்றப்பட்ட சட்டங்கள் இக்கைங்கரியத்தை இனிது நிறைவேற் றின. சிறு நிலக்காரர்கள் நிலம் சட்டப் படி பறிமுதல் செய்யப்பட்டது. நிலம் பெயரளவில்தான் விலை கொடுத்து வாங் கப்பட்டது!

"இப்படிக் கிராமங்கள் பாழானதையும், நகரங்களில் வேலையில்லாத ஜனத்திரள் குழுமியதையும், யந்திரச் சாலைகளில் தொழிலாளர் பட்ட அவதியையும் பிரலா பித்துப் பாடியுள்ளார் ஆங்கிலக்கவி 'கோல்டு ஸ்மித்.' ஆனல் புலவர் புலம்ப லும், ஏழைகளின் கண்ணீரும் இவ்வுல கில் எத்தகைப் பலமுடைத்து? வியாபா ரப் போக்கும், நாணய ஆதிக்கமும், பணம் படைத்தோரின் அரசியல், பொரு ளாதார பலமும், வெற்றியடைந்தன. மேற் கூறியவை யெல்லாம் பிரிட்டிஷ் பொருளா தார சரித்திரம். இவ்வரிய சரித்திரசாட் சியத்தை மனத்திற்கொண்டு நம் நாட்டின் நிலைமையைக் கவனிப்போம்.

ஆதிகாலத்திலிருந்து, ஆங்கிலேயர் வர வுக்குமுன், நம் கிராமங்களின் நிலைமை யென்ன? அரசரும், பெருங்குடி மக்களும் நகரங்களில் வசித்தனர். வெளி நாட்டுப் படை யெடுப்புக்களும், சிற்றரசர்களி டையே இடைவிடா யுத்தங்களும், நகரங் களில் பெருவாழ்வும் சகஜமாகும். ஆனல் கிராம வாழ்க்கையில் இவையெல்லாம் அதிக மாறுதல்களை உண்டாக்கவில்லை. சரித்திர காலமான இரண்டாயிர வருஷங் களிலும், கிராமங்கள் ஏறக்குறைய ஒரே போக்கில்தான் காலந்தள்ளிவந்துள்ளன. ஆனல் துன்பக் கலப்பில்லாக் களியாட்ட மென்று இதனைக் கவித்துரைப்பது சரி யல்ல. அரசர் ஆறிலொன்று பங்கே வரி வாங்கினரென்பர்; நம் காலத்திய சர்க்கா ரின் அலுவல்களில் சிறு பகுதியும் அவரி யற்றவில்லை; படாடோப வாழ்வும், வீண் சண்டைகளுக்குமே வரிப்பணம் பலியி டப்பட்டது. அன்றைய பொது ஜன வாழ்வின் அமைதியும், உயரிய வேதாந்த நோக்கமும் புகழப்படுகின்றன; வாழ்க்கை யின் தேவைகள் குறைவாயிருந்தமையும், உள்ளதைக் கொண்டு திருப்தியடையும் மனேநிலையுமே இதற்குக்காரணம். அதோடு இவ்வேதாந்த வாழ்க்கையெல் லாம் பாமர மக்களிடையே உண்டென்பது நிச்சயமில்லை. இடைவிடாமல் படைகள் நடமாட்டமும், பஞ்சங்களும், கிராமங் களைக் கொள்ளை கொண்டதும் நாம் அறிந் ததே. இருந்தும், கிராமவாழ்க்கை ஒரு வகையான நிரந்தர நிலையிலிருந்தது உண்மை. கிராமத்தாரின் தேவைகள், கிராமங்களிலேயே உற்பத்தியாகும் பொருள்களால் பூர்த்தி யானதும் நிச்ச யம். நாணயமும், வியாபாரமும் தலை யெடுக்காமல், கிராமங்களில் பண்டமாற்று முறையில் மக்கள் காலந்தள்ளி வந்ததும் சரித்திர சாட்சியாகும்.

முன்னூறு வருடங்களாயின, வெள்ளை யர் வந்து. அதற்கு முந்திய படையெடுப் புகளைப்போல இவர்கள் அமிதப் பொரு ளைக் கொள்ளையடித்துப் போவதில் முனை யவில்லை. இங்கேயே சாச்வதமாக இருந்து, வியாபார விருத்தியும், பொருளாதார, அரசியல், ஆதிக்கமும் பெற்றனர். முத லில் இங்கிருந்து மிளகு, ஏலம் முதலிய வாசனைத் திரவியங்களையும், பருத்தி யாடைகளையும் வாங்கிக்கொண்டு போகவே வந்தனர். இவ்வியாபாரத்தில் ஐரோப் பிய நாடுகள் பலவும் போட்டியிட்டன. அதனல் அவர்களுக்குள்ளேயே தகராறு. உள்நாட்டு சிற்றரசர்களின் சண்டைகளில் அவர்கள் வெவ்வேறு பக்கம் சேர்ந்து தங் கள் ஆதிக்கத்தை நிலைநாட்டிக் கொண்ட னர். கடைசியில் ஆங்கிலேயரே நிலைத்த னர். வியாபாரத்தைத்தவிர, உள் நாட் டில் வரி வசூலிக்கும் உரிமையும், சர்வ மானியங்களும் பெறலாயினர். இதற்

குள் அவர்கள் நாட்டில் யந்திரத் தொழிலபிவிருத்தியினால், மூலப் பொருள்களுக்குத்தேவை அதிகரித்தது. நம்நாட்டு நெசவுத் தொழில் பாழாக்கப்பட்டு, நம் பருத்திமட்டும் ஏற்றுமதி செய்யப்பட்டது; அங்கிருந்து ஆடைகளும் இறக்குமதியாயின. இதனிடையே, நாட்டின் பல பாகங்களும் அவர்கள் ஆட்சிக்குள் வந்தன. வரி விதிப்பதில் பல முறைகளையும் கையாண்டனர். சிறிது காலமாக வரிப்பணம்சேகரித்து வந்த 'கண்டிராக்டர்களை', பல பாகங்களில் சாசுவத ஜமீன்தார்களாக நியமித்தனர். மற்றஇடங்களில் சில்லறைக் குடிகளிடமிருந்து நேராக சர்க்காரே வரி வசூலித்து வந்தனர்.

இப்படிப் பல விதத்திலும் வந்து குவிந்த பணம் முழுதும் இங்கிலாந்தில் தொழிலபி விருத்தியில் செலவிடப் பட்டது. இப்படி உற்பத்தியாகும் பொருளெல்லாம் விற்கப் படவேண்டும்; தவிர, அதற்கான மூலப் பொருட்கள் கிடைக்க வேண்டும். இங்கிலையில்தான் நம் நாட்டில் ரோடுகளும், ரயில் பாதைகளும் வெகுவாகப் போடப்பட்டன. இவையின்றி நாட்டின் மூலைமுடுக்குகளில் அவர்கள் வியாபாரம் எப்படிப் பரவ முடியும்? அதோடு ரயில்பாதைக்கு வேண்டிய முதலும், இயந்திரங்களும் இங்கிலாந்தி லிருந்து இறக்குமதியாயின; இந்த லாபம் வேறு இருக்கிறதல்லவா? இப்படிப் பொருளாதாரச் சுரண்டலும், அந்நியரின் அரசியல் ஆதிக்கமும் அதிகரித்தது.

இக்காலைக் கிராமங்களின் நிலை என்ன? போக்கு வரத்துச் சாதனங்கள் அதிகரித்து, வியாபார வசதிகள் அபரிமிதமாய்க் கிடைத்ததும், வெளிநாட்டில் யந்திரத்தால் உற்பத்தி செய்யப் பட்ட மலிவான சாமான்கள் நம் குக்கிராமங்களிலும் புகுந்தன. இதோடு போட்டியிட முடியாமல் சிறு கைத் தொழில்கள் நாசமாயின. விவசாயத்தைத் தவிர வேறு வேலையில்லாமல் போயிற்று, கிராமங்களில். அதுவும் என்னிலையில்? விவசாயப் பொருள்களின் விலை யெல்லாம் நாட்டின் பல பாகங்களிலும், (என், உலகத்தின் பல பாகங்களிலும்) ஒன்றாயிற்று. உலக மார்க்கட்டின் போக்குகளுக்கு ஒத்தபடி கிராமவாசியும் உழைக்க நேரிட்டது. ஆனால், தொழில் முறையோ, பண்டைக் காலத்ததுதான். நவீன, விஞ்ஞான முறைகளை உபயோகிக்கும் வெளி நாடுகளுடன் போட்டி! நம் கிராமங்களின் கதி வேறெப்படி யிருக்க முடியும்?

குறிப்பான சில மாதிரிக் கிராமங்களை எடுத்துக் கொள்வோம். உயர் வகுப்பாரும், பணமுடையோரும் நகரங்களுக்குப் போய், படித்து வேலை பார்க்கலாயினர். ஊரிலிருந்து வரும் பணமெல்லாம் நகரத்தில் செலவிடப்பட்டது. ஊரில் மிகுதியுள்ளவர் ஏழைகளும், அதிக அறிவில்லாதவருமே. பழைய குருட்டு வழக்கங்களின்படி வீண் செலவுகளுக்குக் குறைவில்லை. கடன் அதிகரித்தது. உலகப் பொருளாதார நெருக்கடி நம் கிராமத்தாரையும் பாதிக்காமல் விடவில்லை. 1928-ல் ஒரு முன்னூறு ரூபாய் கடன் வாங்குகிறான்; அதாவது நூறு கல நெல் என்று வைத்துக் கொள்ளலாம். ஆனால் 1932-ல், அவன் நிலைமை யென்ன? முன்னூறு ரூபாய்க்கு முன்னூறு கல நெல் கொடுக்க வேண்டும். எப்படி உலக மார்க்கட்டின் போக்கு, நம் கிராமத்தானையும் பாதிக்கிறதென்பது இதனால் விளங்கும்.

இப்படியாக, இன்று நம் கிராமங்களின் சீர்கேடான நிலைமைக்குக் காரணம் 'பழிகாரத் தெய்வ'முமில்லை; ஏழை விவசாயியுமில்லை. விவசாயியின் சோம்பேறித்தனம் மட்டும் அவனை இங்நிலைக்குக் கொண்டுவரவில்லை. அவன் குணம் மாறி, ஊக்கமுடன் உழைத்தால்மட்டும் போதாது. இன்றைய உலகப் பொருளாதார அமைப்பான முதலாளித்துவ முறையே நம் நிலச்சுவான்தாரி அமைப்பை ஆட்டிவைக்கிறது. முதலாளித்துவத்திற்கு எதிரே நம் பழைய முறைநிற்க முடியாது. இதுதான் இங்கிலாந்து சரித்திரமும், நம் தேச சரித்திரமும் தெரிவிப்பது.

1932-க்குப் பின் நம் மாதிரிக் கிராமத்தின் போக்கைக் கவனிப்பேவாம். சாயியின் கணக்குப்படி கடன் ஒன்றுக்கு மூன்றானதை முன்பு கவனித்தோம். அதன் பலனென்ன? சிறு நிலக்காரர்

பலர் நிலமின்றி நிற்பதும், பணச் செலாவணியுள்ளோர் மேலும் மேலும் நிலம் சேர்ப்பதுமே.

'அக்கரைச் சீமை'களிலிருந்து திரும்பி வரும் பணமுடையோரும், நாட்டுக்கோட்டைச் செட்டிமாரும், உள்ளூர் பண முதலாளிகளும் தாங்கள் கொடுத்துள்ள கடனுக்குப் பதில் நிலத்தையே பெற முடியும். பண்டைக்காலத்தில் நிலமுடைமை ஒரு பெரிய கௌரவம். அதற்காக அதிக விலை கொடுத்தும் நிலம் வாங்கிச் சேர்த்துக்கொள்வர். இப்பொழுதோ, நிலத்தில் போடும் முதலில் சரியான வட்டி வருமாவென்று கணக்கிடுகின்றனர். அரை வட்டி போட்டாலும், 1932-க்கு முந்திய விலையில் மூன்றிலொன்றாகக் கணக்காகிறது, நிலவிலை. இவ்விலைக்குத்தான் கடன்காரர் பணியவேண்டும். இன்றேல், வீண் கோர்ட் செலவும், அடமான நிலம் அநியாய விலைக்கு ஏலம் போவதும் நிச்சயம். இப்படியாக நிலம் ஒரு சிலர் கைக்குள் வருவதைக் காண்கிறோம்.

இப்போக்கு ஏழைகளுக்குத் தீங்கிழைப்பது தெரிந்ததே. இருந்தாலும் இயற்கை நியதி இப்படித்தான் என்று சரித்திரம் கூறுகிறது. நம்மாதிரிக் கிராமத்தின் குடிகளின் இன்றைய நிலையைக் கவனிப்போம். 1932-க்கு முன் 'சுவந்தைப். பணம்' வாங்கிக்கொண்டு ஒரே முதலாளியிடம் வேலை செய்துவந்த பண்ணையாட்களை இப்பொழுது காண்பதரிது. பொருளாதார நெருக்கடியின் பலனாக, நிலக்காரர்கள் தாங்களே ஆள் வைத்துப் பயிரிடுவதைவிட்டு, குடியானவனிடம் 'வாரத்திற்கும்' 'குத்தகைக்கும்' விட்டு விடுகின்றனர். இப்படியாக ஆங்கில Serfs—ஐப் போன்ற 'பண்ணையாட்கள்' மறைகின்றனர். 'குத்தகைக்குப் பயிரிடும் குடியானவர்கால்'மாகத் தோன்றுகிறது இது. ஆனால், சொத்து உரிமை ஒரு சில பெரும் கைகளில் வருவது கண்கூடு. வருங்காலத்தில் நம் கிராமங்களின் போக்கு எப்படியிருக்குமென்பதையும் சிறிதளவு நிச்சயமாய்க் கூறலாம். பல குடியானவர் தனித்தனியே பயிரிடுவதில் கஷ்டமிருப்பதை நில முதலாளிகள் உணரலாம். உதாரணமாக, நம் நிலப்பரப்பில் மூன்றிலொருபாகம், வாய்க்கால் வரப்புகளில் போய்விடுகிறது. பல பெரும் பாகங்களாக நிலம் அமைக்கப்பட்டால் இச்சேதம் குறையும். தவிர, சிறு நிலக்காரர்கள் தங்கள் பொதுக்காரியங்களில் ஒத்துழைப்பதும் துர்லபம்; 'வாய்க்கால் வெட்டு'வதற்கே அவர்கள் ஒன்றுசேராமலிருப்பது நமக்குத் தெரியும். தவிர, அரசாங்கத்தாரிடமிருந்து எவ்வுதவியும் பெறுவதற்கு வேண்டிய பணப்பலம் இச்சிறு குடியானவர்களுக்கில்லை. பெரு நிலக்காரர்களே இதற்கெல்லாம் முயற்சியெடுக்கக்கூடும். இவ்வித லாபங்களை உத்தேசித்தும், புதிய முறைகளைக் கையாளப் போதிய முதலுள்ள பெரும் நிலக்காரர்கள் இங்கும், இங்கிலாந்தில் நடந்ததைப் போல் 'விவசாயப் புரட்சி' செய்யலாம். இடைக்காலத்தில் எவ்வளவு கஷ்டங்கள் குடிகளுக்கு நேர்ந்தபோதிலும், இப்போக்கு தவிர்க்க முடியாதது. கிருஷிகர் புரட்சி செய்து 'கூட்டுப் பண்ணைகள்' அமைப்பதொன்றே அவர்களுக்குள்ள வேறு வழியாகும்.



பிறவிக் குருடன்

[எஸ். ஆர். ஆதிமூலம், திருவல்லிக்கேணி]

சுட்டினையே நானுணர்வேன்—அச்
சுடுதரும் பொருளறியேன்
பாட்டினையே செவி யுறுவேன்—ஈசா!
பாடகனைக் கண்டறி யேன். 1

உணவின் ருசி யறிவேன்—அவ்
வுணவுருவை நானறியேன்
மணத்தை நுகர்வேன்நான்—அம்
மணங்கமழும் மலரறியேன். 2

அழகென்றும் நிறமென்றும்—நீங்கள்
அடிக்கடியே பேசுகின்றீர்
அழகுநிறம் என்னவென்று—நீங்கள்
அறிவிப்பீர் என்றனக்கு. 3

சூரியன் மறைந்தவுடன்—எங்கும்
சூழும் இருட்டென்பீர்
பாரினி லென்றனுக்கு—இராப்
பகலுமிருட் டொன்றே. 4

கண்ணைக் கெடுக்காமல்—என்றன்
கால்கைதான் கெட்டாலும்
மண்ணிலே என் வாழ்வு—ஈசா!
மாண்புற்றே விளங்காதோ? 5

எனது பண்ணை

(டி. ராஜகோபாலன், மருதூர்.)

பணக்காரக் குடும்பத்திலே பிறப்பதற்குப் பதிலாக தப்பித் தவறி ஏழைக் குடும்பத்தில் பிறந்து விட்டாள் மாரி. அவள் அழகு, பேச்சு, விளையாட்டுக்கள்—எல்லோரது மனத்தையும் கவர்ந்து விட்டது. அவளைப் பார்ப்பா ரெல்லோரும் 'அவளுடன் பேசமாட்டோமா' என நினைப்பர். கறுமை நிறங் கொண்ட அவளது நேத்திரங்களும், முல்லை போன்ற புன்சிரிப்பும், மூக்கும், கன்னமும், ஸ்வர்ண மயமான சரீரமும்—இவளை என்னென்று சொல்வது? மகரிஷிகள் பார்த்த போதிலும் மயங்கி விடுவார்கள். அவளது அழகுக்காகவே—ஏழ்மைக்காகவே—அவள் தாய் கருப்பாயியை என் வீட்டில் வேலைக்கு அமர்த்திக் கொண்டேன். அவளது தகப்பன் வீரனை எனது பண்ணைக் காவல்காரனாக வைத்துக் கொண்டேன். முள் செடியும், கள்ளிக் கொடியும் படர்ந்த புதருக்கு நடுவே பூத்துக் குலுங்கித் தென்றலிலே அசைந்தாடும் ஓர் பூக்கொடி போலவே, என்முன் தினமும் மாரி காட்சியளிப்பாள். வறுமையும் துக்கமும் சேர்ந்து இயற்கை யழகை மூட முயலும் ஓர் ஏழ்மைத் தோற்றம். முகத்திலே ஓர் குறுகுறுப்பு. கண்களிலே ஓர் பரபரப்பு. சரீரத்திலே ஓர் சுறுசுறுப்பு.

அன்று வெள்ளிக் கிழமை. வழக்கப்படி தன் தகப்பனுக்குக் கஞ்சி எடுத்துச் சென்றாள். மாலை மணி ஐந்து. "இந்தா! மாரி! மாடு, கிடு வராமே, இங்கியே குந்திக்கிட்டு, பாத்துக்கோ! நான் தோ வாரேன்" எனக் கூறிவிட்டு, வீரன் குதித்துக் கொண்டே தெற்கே ஓடினான். வயலைப் பார்வையிட அன்று அங்கு சென்றிருந்தேன். "சாமி, சாமி! புள்ளெ மாரி! அடிபடுது! போவுது!" என்ற வண்ணம் ஓர் குடியானச் சிறுவன் என் எதிரே ஓடிவர, நானும் வயலுக்குப் பறந்தேன். ஆகா! என்ன கொடுமை! வயலை மாடு அழிக்கின்றது. மூங்கில் தடியுடன் ஓடி, ஓடி அடிக்கிறான். மாடுகள் பறக்கின்றன. இப்போது அவனுக்குப் பொங்கி வழியும் கோபத்தைக் குழந்தை மாரி, தன் தேகத்தில் ஏந்துகிறாள் போலும்! "மாடு வந்தது கண்ணு தெரியலே! மாடு, பயிரெ அழிச்சா, பண்ணெலெ பணம் தருவாங்க! இந்த மாஸம் வவுத்துலெ 'மண்ணுதான்'" என்றவாறே மாரியின் தலையில் ஓர் அடி, போடுகிறான் வீரன். "ஆயா" என்று அலறிக்கொண்டே ஓடுகிறாள் ஆறு வயதுள்ள மாரி! ஓட, ஓட விரட்டுகிறான். இடிபோல் இடுப்பில்ஒன்று! முள் தடியினால் முதுகில் ஒன்று, ரத்தம் பீறிட்டுப் பீச்சுகிறது. வயற் சேற்றில் சாய்கிறாள் மாரி. புரட்டிப் புரட்டி அடிக்கிறான்! வைகிறான்! உதைக்கிறான்! தலை கேசத்தைப் பிய்க்கிறான். பாவி! ராக்ஷஸப் பயல்! குடிகார வீரன்! மூர்ச்சையாய்க் கிடந்தவளைக் கொல்ல முயல்கிறான்! கத்தியை எடுத்து விட்டான் — குடி வெறியில்! அந்தோ! அவள் யமதர்ம ராஜனின் கோட்டை வாயலில் கிடக்கிறாள்!............பறந்து ஓடினேன். வீரனது கண்கள் சிவந்து கிடக்கின்றன. ஓர் இடத்தில் நிற்க முடியவில்லை. தள்ளாடுகிறான். கூழைக் கும்பிடு போடுகிறான், எனக்கு—எல்லாம் கள்ளின் வேலை! ——மாரியின் தேகம் தடித்து, வீங்கி விட்டது. ரத்தம் கொட்டுகிறது. தோளில் போட்டுக்கொண்டு ஓடினேன்.

குடியானத் தெருவே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்சென்றேன். இரவு மணி எட்டு. மாரி முக்கி, முனகிக் கொண்டே கண்ணைத் திறக்கிறாள். மூர்ச்சை தெளிந்தது, நான் வீடு திரும்பினேன்.

கல்வி

[ஆர். பங்காரு ஸ்வாமி, ஸ்ரீவைகுண்டம்.]

[கல்வியின் சிறப்பைப்பற்றித் தமிழ் நூற்களில் பல பொன்மணிகள் காணப் படுகின்றன. "கற்கை நன்றே, கற்கை நன்றே; பிச்சை புகினும் கற்கை நன்றே" என்பதிலிருந்து எவ்விதமும் கல்வி பயில வேண்டுமெனத் தெளிவாகிறது. 'கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு' ஏன்பதாலும் கவி அரசு புவி அரசைக் காட்டிலும் பெரியவன் எனப் புலப்படும். 'கல்வி கரையில; கற்பவர் நாள் சில' இஃது நாம் காலத்தை வீணாக்கக்கூடாது என்பதைக் குறிப்பிடுகிறது. கீழே வருவன, பிரபல ஆங்கில அறிஞராகிய 'பிரான்ஸிஸ் பேகன்' எழுதிய வியாஸத்தைத் தழுவி வரையப்பட்டுள்ளது.

கல்வி மகிழ்ச்சியையும், அழகையும், திறலையும் தருவது: தனிமையில் மகிழ்ச்சியையும், சம்பாஷணையில் அழகையும், தொழில் முறையில் திறலையும் காட்டுகிறது.

மேதாவிகள் ஒன்றன் பின் ஒன்றாய் விஷயங்களை ஊகித்தறிந்து காரியங்களை நிர்வகிக்கக்கூடுமெனினும், கல்வி கேள்விகளில் சிறந்தவர்களே விஷயங்களை ஆய்ந்தோய்ந்து பார்த்து, சரியானபடி ஆலோசனை கூறுவதற்குத் தகுதியாகின்றனர்.

படிப்பில் அதிக நேரம் செலவிடுவது மதியீனமே. படிப்பை அனாவசியமாக வெளிக் காட்டுதல் வீண் டம்பமாகும். புஸ்தகங்களில் கண்டவாறு வாழ்க்கை நடத்தப் பிரயத்தனப்படுவது உலகம் தெரியாத படிப்பாளி செய்யும் வேலையாகும்.

கல்வி இயற்கைக்கு அனுகுணம். அனுபவம் கல்வியின் மகுடம். பிரகிருதி சுபாவங்கள், தாங்களே உண்டாகும் செடிகள் போன்றன. கல்வியாகிற கத்தரிக்கோலால் வெட்டி விடவேண்டியது அவசியம்.

தந்திரசாலிகள் கல்வியைப் புறக்கணிப்பர். பாமரர்கள் அதைக் கண்டு ஆச்சரியப்படுவர். ஆனால் புத்திசாலிகள் அதை உபயோகப் படுத்திக்கொள்வார்கள்.

கல்வி, விதண்டாவாதம் செய்யவும் குதர்க்கம் புரியவும் ஏற்பட்டதல்ல; அல்லது படித்ததைப் படித்தபடியே ஒப்புக்கொண்டு மூட நம்பிக்கையுடன் வாழ்வதற்கும் அல்ல; பேசிப் பேசிப் பொழுது போக்குவதற்காகவுமல்ல. சீர் தூக்கி சிந்திக்கும் இயல்பை உடையதே உண்மைக் கல்வியாகும்.

உருசி பார்க்கும் புஸ்தகங்கள் சில; உருட்டி விழுங்கவேண்டிய புஸ்தகங்கள் சில; நன்றாக மென்று ஜீரணஞ் செய்ய வேண்டிய புஸ்தகங்கள் சில.

விளக்கிக் கூறுமிடத்து, சில நூற்களில் சில பகுதிகளே படிக்கத் தகுந்தவை. இன்னும் சில நூற்கள் ஆழ்ந்து படிப்பதற்கு ஏற்றவை யல்ல. ஆனால் சில நூற்கள் ஆற்றலுடனும் ஆர்வத்துடனும் படிக்கப்படவேண்டியவை.

கல்வி, மனிதருக்கு நிறைவைக் கொடுக்கிறது; கேள்வி அவனுக்கு எச்சரிப்பைத் தருகிறது; எழுத்தோவென்றால் நுல்லியமான அறிவை வளர்க்கிறது.

தாய் நாடு

[எஸ். சங்கரன், திருவல்லிக்கேணி]

மாலி எழுதியிருந்தாள் :

" சாங் !

உனக்கு சில நாட்களில் பைத்தியம் பிடித்து விடுமென்று நினைக்கிறேன்.

அட பாவமே! அப்பொழுதே நான் சொல்ல வில்லையா? உண்மையில் எனக்கும் அங்கே வரவேண்டு மென்று தோன்றுகிறது. பத்திரம்! உன்னைக் கல்யாணம் செய்துகொள்ளவல்ல, சீர் கெட்டிருக்கும் உன் பொருள்களை, ஒழுங்குபடுத்த — மாலி." அவனுக்கு இந்த ஏளனம் பரம ஆனந்தத்தைக் கொடுத்தது. இதுவரை அவன் பெற்றிருந்த கடிதங்களில் மனிதர்கள் தங்களைப் புழு பூச்சிகள் போலவும், தன்னை ஒரு தேவன் போலவும் பாவித்து கெஞ்சிக் குழைந்து எழுதி யிருந்தனர். சாங் இதை வெறுத்தான்.

7-4-40 முத்தில் வெளியான தன் தொடர்ச்சி

ஜன்னல் வழியாக ஒரு முறை தெருவை நோக்கினன். சூரியன் அஸ்தமித்து விட்டது. இதற்குள் ஜனங்கள் கால்மாடு தலைமாடாக வாசலில் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தனர். எங்கேயோ ஒரு நாய் குலைத்தது. அவன் நினைத்தான் : "இவர்களெல்லாமா என் மனிதர்கள் ! இதுதானா என் தாய் நாடு?" மள மள வென்று பின் வருமாறு ஒரு பதிலனுப்பினன்: "மாலி! ஸத்தியமாகச் சொல்லுகிறேன். நீ இங்கே வரவேண்டாம். யாரையாவது கல்யாணம் செய்துகொண்டு சௌக்கியமாக, சுத்தமாக இரு."

அவனுக்கு ஒரே ஒரு நம்பிக்கை மட்டுமிருந்தது. தன் தாய் தான் பிறந்த கிராமத்தைப்பற்றி அடிக்கடி பெருமை யடித்துக் கொள்வதைக் கேட்டிருக்கிறன். ஆனல் அங்கே போன பிறகு அந்த அல்ப நம்பிக்கையும் போய்விட்டது. அங்கேயும் அதே மனிதர்கள் ! அதே காட்சி ! ஜனங்கள் சந்தேகத்துடன் அவனை நோக்கினர். ஸ்திரீகள் பயந்து நடுங்கி மூலையில் பதுங்கினர்.

அவன் வீட்டிற்குத் திரும்பி வந்ததும் அறையில் அநேக முத்திரைகளுடன் ஒரு கசங்கிய கடிதம் கிடந்தது. பரபரவென்று உடைத்துப் படித்தான். மாலி எழுதி யிருந்தாள்! "சாங், அப்பா வேலையின் நிமித்தம் அங்கே வருகிருர். நான் உன் நிமித்தம் வருகிறேன். ஸரி. கல்யாணத்திற்கு ஏகப்பட்ட தடபுடல் செய்யாதே. துறைமுகத்தில் சந்திப்போம்."

ஒரு கணம் யோசனை செய்தான் சாங். மாலியை வைத்துக்கொண்டு என்ன செய்வதென்று தெரிய வில்லை அவனுக்கு. இத்தனை நாட்களாக அவள் அவனை நோக்கி வந்து கொண்டிருக்கிருள்—அவனறியாமல்!

இரண்டு நாட்கள்தானிருந்தன அவள் வருகைக்கு. அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சிற்றப்பாவிடம் கொஞ்சம் பணம் வாங்கிக்கொண்டு சைனுவில் வசிக்கும் அமெரிக்கர்கள் இருப்பிடத்தில் (Settlement) ஒரு சிறு வீட்டை ஏற்பாடுசெய்தான். இன்னும் மாலி விரும்பும் படங்கள், நாற்காலிகள், மேஜை, புஷ்பத் தொட்டிகள் இவைகளை வாங்கி நிரப்பினன். துறை முகத்தை அடைந்ததும் முகம் தொங்கிப்போய்விட்டது. இந்த காட்சியைக் கண்டாலே மாலி திரும்பிவிடுவாளே ! ஆனல் இவன் நினைத்தபடி ஒன்றும் விபரீதமாக நடக்கவில்லை. அதே குறும்பு நகையுடன் மாலி ஒரு சின்னஞ்சிறு அமெரிக்க வானம்பாடி போல் கப்பலிலிருந்து இறங்கினள்.

சாங் தன்னையே மறந்துவிட்டான். மாலியின் இளம் தளிர்போன்ற விரல்கள் அவன் பிடியில் அகப்பட்டுப் படாதபாடு பட்டன. மாலி புன்சிரிப்புடன். "சாங்! என்ன அப்படிப் பார்க்கிறாய்! இதோ அப்பா வந்திருக்கிறார். உனக்குக் கண் தெரியவில்லையா?" என்றாள். தன் தோல் கைப்பையிலிருந்து சாங் தகப்பனார் கொடுத்த கடிதங்களை அவனிடம் கொடுத்தாள். துறைமுகத்தை விட்டு வெளியே வந்ததும் சாங் அவசர அவசரமாக ஒரு டாக்ஸியை, கூப்பிட்டான். ஆனால் மாலி "வேண்டாம். இந்த ரிக்ஷாவிலேயே போவோமே! டாக்ஸி எனக்கு எவ்வளவு அலுத்துவிட்டது தெரியுமா!" என்று தடுத்தாள்.

சில தினங்களுக்குள் ஒரு புதிய மாறுதலை மாலியிடம் அவன் உணர்ந்தான். முன்போல எதற்கெடுத்தாலும் குரூரமாக கேலி செய்யும் தன்மை இப்பொழுது மறைந்து விட்டது. மெதுவாக சீன குணங்கள் அவளிடம் தோன்றலாயின. ஒரு தடவை அவன் நினைத்தான். மாலி இருந்தாலும் ஸரி, இல்லாவிட்டாலும் ஸரி, தன் தாய்நாடுதான் தனக்குப் பிரதானம். ஆனால் இப்பொழுது, மாலி எங்கிருக்கிறாளோ அந்த இடம்தான் அவன் நாடு. சீன தேசம் முழுவதிலும் அவனுக்கு ஒரே ஒரு இடம்தான் தேவலோகமாக விருந்தது. காலையிலிருந்து மாலை வரை, பிச்சைக்காரர்களின் தொந்திரவு, அஸங்கியம் பிடித்ததெருக்கள் வழியாகச்செல்லுதல் ஆகியவைகளையெல்லாம் சகிக்க அவன் பயப்படவில்லை. அவ்வளவும் மாலையில் வீட்டில் மாலியுடன் டீ சாப்பிடும் பொழுது மறைந்துவிடும். வெகு நாட்கள்வரை இருவரும் வீட்டில் ஆங்கிலம் பேசி வந்தனர்—சீன பாஷை தெரியாததால். ஆனால், மாலியின் பிடிவாதத்தின் பேரில் ஒரு உபாத்தியாயர் அவளுக்கு அதைச் சொல்லிக்கொடுக்க நியமிக்கப்பட்டார். ஒரு நாள் திடீரென்று மாலி சீனக்காரியைப்போல் நீளமான மெல்லிய ஸில்க் கவுனை தரித்துக்கொண்டு அவன் முன் வந்து "சாங்! நான் இப்பொழுது எப்படியிருக்கிறேன், இனிமேல் இந்த உடைகளைத்தான் அணிந்துகொள்ளப் போகிறேன். இப்பொழுதுதான் ஆடையணிந்துகொள்வது போலவும் இதுவரை நிர்வாணமாகத் திரிந்தது போலவும் தோன்றுகிறது" என்றாள். சாங் ஏதோ பேச வாயெடுத்தான். ஆனால், வார்த்தைகள் தொண்டையிலேயே நின்று விட்டன.

மாலி ஆங்கில பத்திரிகைகள் படிப்பதை நிறுத்திவிட்டாள். சீனப் பத்திரிகை படிப்பதற்கு அவள் இன்னும் முடியாதவளாக இருந்தாள். ஆகையினால் வெளியுலகத்தில நடக்கும், பஞ்சம், சீன உள்நாட்டுக்கலகம், வழிபறிக் கொள்ளைக்காரர்களின் அட்டூழியம் ஆகியவைகள் அவள் கவனத்திற்கு வராமலே நடந்து வந்தன. சாங் ஒரு பெருமூச்சுடன் கடவுளை வாழ்த்தினான். அந்த சிறிய வீடு சைனாவின் கொடுமைகளை அவள் கண்களினின்று மறைக்கும் திரையாக விளங்கிற்று. கொந்தளிக்கும் அந்த பயங்கர நாட்டில் தான் மாலிக்காக ஒரு நூதன உலகத்தை அவன் சிருஷ்டித்திருந்தான். அதைப் பத்திரமாகப் பாது காக்கும் பொறுப்பு அவனைச் சேர்ந்தது.

மாலி ஏழு மாத கர்ப்பமாக இருந்தாள் ஒரு நாள் காலையில் டீ சாப்பிட்டுக்கொண்டிருக்கும்பொழுது ஒரு பீரங்கி சப்தம் கேட்டது. இருவரும் ஒருவரை யொருவர் பார்த்தனர். சாங்வுக்கு அப்பொழுது தான் உண்மை புலப்பட்டது. அவன் சில மாதங்களாக பத்திரிகை படிக்கவில்லை. ஜப்பானியர் சீன எல்லையில் யுத்தம் தொடங்கிவிட்டனர்? அப்பொழுதுதான் "மாலி எதற்காக இந்த நரகத்திற்கு வந்தாள்" என்று அவன் நினைத்தான்.

இனிமேல் மறைப்பதில் பயனில்லை. தெருக்களில் ஜனங்கள், ஏழைகளும் பணக்காரர்களும் புகலிடத்திற்கு யாசித்தனர். சாங் ஒரு வாரமாக வீட்டிற்கே போகவில்லை. தன் கடையிலுள்ள சாமான்களை பத்திரப்படுத்துவதற்கே அவனுக்கு பொழுது சரியாயிருந்தது. ஒவ்வொரு பீரங்கி சப்தம் கேட்கும் பொழுதும் மாலி பத்திரமாயிருக்கிறாள் என்று அவன் தனக்குத்தானே சொல்லிக்கொண்டான்.

"மாலி வியாதியுற்றுக் கிடப்பாள்" என்று நினைத்துக்கொண்டு அவசர அவசரமாக வீட்டிற்குத் திரும்பினன். அவன் கண்ட காட்சி என்ன? அவன் அருமையான நாற்காலிகளிலும் பாய்களிலும் அனேகம் பாமர ஜனங்கள் உட்கார்ந்து வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தனர். ஆவேசத்துடன் அடுக்களைக்குப் போனன். ஏராளமான பாத்திரங்களில் பிரமாதமாகச் சமையல் நடந்துகொண்டிருந்தது. மாலி ஆயாசமாகக் காணப்பட்டாள். ஆனல் அவள் கண்களில் ஒரு நூதன ஜீவகளை பிரகாசித்தது.

"இதெல்லாம் என்ன?" என இரைந்தான் சாங். "உஸ், அவர்கள் மிகவும் பசியால் வருந்துகிருர்கள். பாவம்! வீடுகளெல்லாம் தவிடுபொடியாய்விட்டன" என்ருள் மாலி. குழம்பை ருசிபார்த்துக் கொண்டே சாங் பைத்தியம் பிடித்தவன் போல் அவளை வெறித்துப் பார்த்தான்.

"இந்தப் பரதேசிக் கூட்டங்களுக்குச் சோறுபோட்டு ஆதரிக்க வா...!"

"ஏன் முடியாது, சாங்? இவர்களைப் போஷிப்பதற்கு வேண்டிய அளவு நம்மிடமில்லையா?"

"இந்த துர்நாற்றத்தை சகிக்க முடியவில்லையே!"

"சாங்! உனக்கு வெட்கமாயில்லையா! இவர்களெல்லாம் உன் மனிதர்கள். நீ இல்லாதபோது நான் அறிந்த விஷயங்களை நீ கேள்விப்பட்டால்..." சாங் பாய்ந்து அவள் கைகளைப் பிடித்துக்கொண்டு "மாலி! உன்னை இந்தத் துன்பங்களிலிருந்து மறைக்க நான்பட்ட கஷ்டங்களை நினைத்தால்...மேலும் உனக்குக் குழந்தை பிறக்கப்போகிறது. உனக்கு மட்டும் அவர்கள் ஏதாவது தீங்கு செய்தால் நான் ஒருபொழுதும் மன்னிக்கமாட்டேன்" என்ருன். பறக்க விழித்துக்கொண்டு சொன்னுள் மாலி: "சாங்! அப்படி செய்ததால் எனக்கு வாழ்க்கையில் ஒன்றுமே ருசியில்லாமல் போய்விட்டது. வெறுமனே இருப்பது எனக்கு எவ்வளவு கஷ்டமாயிருக்கிறது தெரியுமா? அதே சமயத்தில் லக்ஷக்கணக்கான ஜனங்கள் பராமரிப்பற்று அலைந்துகொண்டிருந்தனர். இந்தா சாங்; இப்பொழுது உனக்கு புரிந்திருக்கும், நான் சீனவை விரும்புகிறேன, அமெரிக்காவை விரும்புகிறேன என்று."

சாங் கண்களில் ஆச்சரியம் நிரம்பி வழிந்தது. முதன் முதலில் அமெரிக்காவில் தான் கண்ட மாலிக்கும் இப்பொழுது காணும் இந்த மாலிக்கும் எவ்வளவு வித்தியாசம்! கடைசியில் அவள் சீனவை விரும்புகிருள். அதன் ஜனங்களை விரும்புகிருள். சீனவிலுள்ள சகலத்தையும் விரும்புகிருள்! கடைசியாக சாங், ஒரு மூலபலத்தைப் பிரயோகித்தான். "மாலி! நீ இப்படி பேசக்கூடாது—குழந்தைக்காகவாவது..." மாலி ஒரு பெண் புலியைப் போல் காட்சியளித்தாள். ஆனல் அவள் குரல் மிருதுவாக விருந்தது. "சாங்! அந்தக் கவலை உனக்கு வேண்டாம்! என் மகன் அவனுக்கு சொந்தமான இடத்தில், அவன் மனிதர்களுக்கிடையில், அவன் 'தாய் நாட்'டில்தான் பிறக்கப்போகிருன். இந்தா? இந்த குழந்தைகளைக் குளிப்பாட்டிக்கொண்டிரு. குழம்பை இறக்கி வைத்துவிட்டு வருகிறேன்" என்ருள்.

(முற்றிற்று)

வேடிக்கை சம்பவங்கள்-பொறுமைசாலி

[T. S. ரமணி, செம்பனூர் கோவில்.]

ஸ்ரீதரன் ஒரு பொறுமைசாலி. அப்படியில்லாவிட்டால் லீலாவுடன் குடித்தனம் செய்யமுடியாது என்று ஊரார் சொல்லுவார்கள். இருந்தாலும் மனுஷ்யன்தானே. எதற்கும் ஒரு எல்லை உண்டல்லவா? காப்பி மாத்திரம் வேளாவேளையில் கிடைக்காவிட்டால் ஸ்ரீதரன் பொறுமை பறந்துவிடும். ஒரு நாள் காப்பிபோட நேரமாகிவிட்டது. ஸ்ரீதரன் லீலாவைக் கோபித்தான். லீலா பால்காரன்மேல் குற்றம் சாட்டினாள். இந்த குற்றச்சாட்டுக் கற்பனை பெரிய வாக்குவாதத்தில் முடிந்தது. இதற்கு எல்லாம் காரணம் ஸ்ரீதரனுக்கு உண்டான தலைவலி. வேளா வேளையில் காப்பியில்லாவிட்டால் ஸ்ரீதரன் பொறுமையாக இருந்தாலும் தலைவலி பொறுமையாகயில்லை! மனதை நொந்துகொண்டு சட்டையைப் போட்டுக்கொண்டு காப்பி சாப்பிடாமல் வெளியே வந்தான்.

எல்லாம் ஒத்தாற்போல் சங்கரன் எதிரே வருவது தெரிந்தது. சங்கரன் எதிரில் வந்தால் சகுன பலன் சொல்லவே வேண்டியதில்லை. தப்பிப் பிழைத்து திரும்பி வருவது திருமாலின் செயல் தான். ஸ்ரீதரன் அவனைப் பார்த்தும் ஒன்றும் பேசவில்லை. "இது எதடா சனியன்?" என்று கையைக் கட்டிக்கொண்டு வாசற்படியிலேயே நின்றான். ஆனால் சங்கரன் விடுகிறவனா? 'எங்கே சீக்கிரமாகவே வெளியே கிளம்பிவிட்டாய் போலிருக்கிறது. ஏதாவது 'ஸினிமா' பக்கம்உண்டோ?' என்று வாயைக் கிளப்ப ஆரம்பித்தான்.

காப்பி சாப்பிடவேண்டும் என்ற எண்ணம் ஒரு புறம், தலைவலி மற்றொரு புறம், என்னசொல்வது என்பது புரியவில்லை. இதில் ஸினிமா என்று சொன்னவுடன் எரிச்சல் வந்தது. பொதுவாகத் தலையை ஆட்டிக்கொண்டு சற்று சிரித்தான். ஸ்ரீதரன் பொறுமைசாலி அல்லவா?

இப்படி இருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது உள்ளே யிருந்து லீலா ஜன்னல் வழியாகப் பார்த்தாள். எதிர் வீட்டு கமலா புதுப்புடைவைக் கட்டிக்கொண்டு வெளியே நின்றதையும் கண்டாள். ஸ்ரீதரனும் சங்கரனும் சிரித்துக்கொண்டிருப்பதும் தெரிந்தது. இதுதான் சமயம் என்று யோசித்தாள்.

'காப்பியைச் சாப்பிட்டுவிட்டு சிரித்துக் கொண்டிருக்கிறதானே?' என்று கையிலிருந்த காப்பியை நீட்டினாள்.

ஸ்ரீதரன் பதில் பேசவில்லை. சிநேகிதன் முன் கோபத்தையும் காட்டிக் கொள்ள முடியவில்லை. மேலும் பொறுமைசாலியல்லவா! பேசாமல் காப்பியை வாங்கிச் சாப்பிட்டான். உடனே வெளியே கிளம்பிவிட்டான். அஸ்தமித்த பிறகு தான் வீடு திரும்பினான். சாயங்கிரம் தான் காட்டிய கோபத்தினால் என்ன மேலும் வருமோ என்ற யோசனையில் மெதுவாகவே உள்ளே நுழைந்தான்.

வரும்போதே லீலா புன்னகையுடன் கையில் காப்பியுடன் எதிர்கொண்டு அழைத்தாள். இதென்ன வேடிக்கை! ஏதோ நல்லகாலம், என்ற யோசனையுடன் காப்பியைக்குடிக்க ஆரம்பித்தான். 'டம்ளரைக்' கீழே வைத்துவிட்டு, 'காப்பி நன்றாக யிருக்கிறதே' என்று பேச ஆரம்பித்தான்.

'வாஸ்தவம்தான், இப்போதுதான் புதுக் கொட்டை வறுத்துப் போட்டேன். மேலும், பாலும் புதுப்பால்' என்றாள் லீலா.

ஸ்ரீதரன் முகத்தில் ஒரு விளையாட்டுச் சிரிப்பு தோன்றியது.

'அது இருக்கட்டும். அப்புறம் மறந்துவிடுவேன். இந்தப் புடவையைப் பாருங்கள்' என்று உள்ளேயிருந்து ஒரு புடவையை எடுத்துக் கொண்டு வந்து போட்டாள்.

(94-ம் பக்கம் பார்க்க)

அன்பு வெள்ளம்

[டி. வேங்கடராமன், தியாகராய நகர்]

சாயங்கால வேளை. பையன்களெல்லோரும் குதூகலமாக விளையாடிக் கொண்டிருக்கின்றனர். 'பிள்ளையார் பந்து', 'சடுகுடு', 'ஆபிரம்பாண்டி', இப்படிப் பல விளையாட்டுக்கள் வெகு மும்முரமாக, நடந்து கொண்டிருக்கின்றன. அவர்கள் ஓடுவதினாலும், குதிப்பதினாலும் உண்டாகும் புழுதி, ஆகாயத்தை அளாவியதாய், குப்பத்து மைதானத்தையே மறைத்தது.

ஆனால், அவர்களுடைய களியாட்டங்களில் சேராதவன், ராமு ஒருவன் தான். என்றுமில்லாமல் அவன் மனம் அன்று வியாகூலமடைந்திருந்தது. அவன் மைதானத்தில் ஓர் தனிமையான இடத்தில் உட்கார்ந்துகொண்டு, ஏதோ யோசிப்பதும், விளையாடுபவர்களிடையே கவனமாகப் பார்ப்பதுமாக விருந்தான். அவன் தன்னையுமறியாமல் ஏதோ சொல்லிக்கொண்டிருந்தான். "ஏன் நான் அவனோடு 'டு' விட்டேன்? அவன் நம்மோடு மறுபடியும் சேர்வானா?.... ஆ, மணி!" என்று புலம்பிக்கொண்டிருந்தான்.

மணியும் ராமுவும் இணை பிரியாத நண்பர்கள். அவர்களிருவரும் சேர்ந்தே படிப்பார்கள்; சேர்ந்தே பாடசாலைக்குப் போவார்கள்; சேர்ந்தே விளையாடுவார்கள். இதனால் மணி தனக்குத் தெரியாத சில விஷயங்களை ராமுவிடமிருந்து கற்றுக்கொள்ளவும்; ராமுவும் அம்மாதிரி சில அரிய விஷயங்களை, மணியிடமிருந்து கற்றுக்கொள்ளவும் ஏதுவாயிற்று.

ராமுவிற்கு ஜலமென்றாலே பயம். அவனுக்கு நீந்தத் தெரியாது. ஆனால் இப்பொழுது, மணியின் உதவியால் குப்பத்து ஆற்றையே ஆட்டி வைக்கிறான் எனலாம். அந்த ஆற்றில், எந்த பெரிய வெள்ளத்திலும் நீந்தும் சக்தியைப் பெற்றுவிட்டான். குளிக்கச் சென்றால், எல்லாருக்கும் முந்திச் செல்பவர்கள் ராமுவும், மணியும் தான். ஆனால் கரையேறுவது மாத்திரம் எல்லார்க்கும் கடைசியிலே தான்.

இப்படியிருக்கையில், ராமு, கஸ்தூரி என்னும் ஒரு பையனை பாடசாலையில் கண்டான். அவன் அந்த ஊருக்குப் புதிதாக வந்திருக்கும் பையன். அவன் தகப்பனார் ஓர் 'ஓவர்ஸியர்'. கஸ்தூரி நல்ல படிப்பாளி. அவன் படிப்பு ராமுவின் மனதைக் கவர்ந்தது. கஸ்தூரியும் ராமுவிடம் அன்பு கொண்டான். இருவருக்குமிடையே பேச்சு வார்த்தைகள் உண்டாகி, அது நாளடைவில் பெரிய நட்பாக முடிந்தது.

ராமு, கஸ்தூரியின் வீட்டிற்குப் போவதுண்டு. அங்கு கஸ்தூரியோடு விளையாடுவான். கொஞ்ச நேரம், 'கிராமபோன்' கேட்பான். கஸ்தூரி தனக்குக் கிடைக்கும், பக்ஷணங்களில் ராமுவுக்கும் கொடுப்பான்.

ராமுவுக்கும், கஸ்தூரியின் சினேகம் உண்டான பிற்பாடு, மணியோடு ஜாஸ்தியாக விளையாட முடியவில்லை. மேலும், அவனுக்கு, முன்பெல்லாம் இன்பமாகவிருந்த மணி, இப்பொழுது ஏனோ கசப்பாக மாறிவிட்டான்.

கஸ்தூரியின் சினேகம் மணிக்குத் தெரியாது. அவன் ராமு தன்னோடு விளையாட வராததைக் கண்டு வருத்தமுற்றான். 'சாயங்கால வேளை எதற்காக வருகிறது!' என்று வெறுத்துக்கொள்வான். மேலும் சில சமயம், 'சாயங்கால வேளையில் ஒரு நிமிஷம்கூட வீட்டிலே தங்கமாட்டானே, இப்பொழுது ஏன் வருவதில்லை?' என்று எண்ணமிடலானான்.

ஒரு நாள் சாயங்காலம் மணி ராமுவின் வீட்டையடைந்து, ராமுவைக் கூப்பிட்டான். அவன் ஓடி வந்து, 'என்ன?' என்று கேட்டான். மணி, 'விளையாட வரவில்லையா?' என்று தீனமான குரலில் கேட்டான். "இதோ வருகிறேன்" என்று சொல்லி வெளியே ஓடிவிட்டான் ராமு. அவன் அப்பொழுது கஸ்தூரி வீட்டிற்குப் போகிறான் என்பது மணிக்குத் தெரியுமா?

ஆனால் இந்த விஷயம் மணிக்குத் தெரியாமல் போய் விடவில்லை. அவன் கஸ்தூரியைக் கண்டபோதெல்லாம், தன் கோபத்தைக் காட்டி வந்தான். ஒரு நாள் கஸ்தூரி ராமுவைத் தன்னருகிலிருந்து பலவந்தமாக இழுத்துக்கொண்டு போகவே, மணி கோபமடைந்து, அவனை அடிப்பதாகப் பயமுறுத்தினான். அதற்குக் கஸ்தூரி, பயந்து போய் ராமுவை மணியோடு, 'டூ' விடும்படிச் சொன்னான். ராமுவும் அதற்கு சம்மதிப்பவன் போல் தலையை அசைத்துவிட்டு, கஸ்தூரியோடு சென்றுவிட்டான்.

ஒரு நாள் காலை ராமு க்ஷவரம் செய்துகொண்டு, ஸ்நானம் செய்ய ஆற்றிற்கு வந்திருந்தான். ஆற்றில் கோடை வெள்ளம் ஓடிக்கொண்டிருந்தது. மணியும் அங்கே ஸ்நானம் செய்து கொண்டிருந்தான்.

வெள்ளத்தைக் கண்டதும் ராமுவுக்கு 'குஷி' பிறந்துவிட்டது. அங்கு தன் நண்பன் வருகையை எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் மணியின் உருவத்தை அவன் காணாதது போல், கரையிலிருந்து ஒரு 'குதி' குதித்துத் தண்ணீரில் மூழ்கி, கரையேறினான். இப்படியாக, ஒன்று, இரண்டு மூன்று தடவைகள் ஆயின. நான்காம் தடவை குதித்தான்.

அப்பொழுது அவன் அரை வேஷ்டி அவிழ்ந்து போயிற்று. வேஷ்டியை ஓடும் ஜலத்தில் கட்டிக் கொள்வது சிரமமாக விருந்ததால் வாயால் பிடித்துக்கொள்ள முயன்றான். ஆனால் அதற்குள், வேகமாக ஆற்று ஜலம் ஓர் பாறையின் அருகிலிருக்கும் சுழலிற்கு இழுத்துச் சென்றுவிட்டது. சுழல் ஓர் அமுக்கு அமுக்கிற்று. ராமுவை அது அகாத பாதாளத்திற்குக் கொண்டுபோய், பிறகு மேலே தூக்கிற்று. ராமு மேலே வந்ததும் சமாளிக்க முயன்

றூன். ஆனல் என்ன செய்வது? அது இன்னுமொருதரம் அமுக்கி மேலே தூக்கிற்று. அப்பொழுது ராமுவுக்குப் பிரக்ஞை போய்விடும் போலிருந்தது. இதற்குள்ளாக நாலு வாய் ஜலமும் குடித்துவிட்டான். தாங்க முடியாதவனுய், அவன், 'மணி' என்றூன். மணி இவைகளை யெல்லாம் கவனிக்காமலில்லை. ஒரு புறம் துக்கம் வாட்டிற்று. மறுப்புறம், அவன் அன்புமணி, தானுகப்போக இசையவில்லை. ஆனல், 'மணி' என்ற ராமுவின் குரலைக் கேட்டதும், அவன் கை கால்கள் அவனையு மறியாமல், ராமுவிடம் இழுத்துச் சென்றன. ராமு மறுபடியும் உள்ளே சொருகப்படும் சமயம். அதே சமயத்தில் மணியின் கைகள் ராமுவின் தலைமயிரைப் பிடித்து வேகமாகக் கரையை நோக்கியிழுத்தன. இந்த சம்பவம் நடந்த அன்றைய தினமே, செய்தி ஊர் பூராவும் பரவிற்று. ராமுவின் வெட்கம் சொல்லி முடியாது. கடைக்குச் சென்றூலும், ஆபீஸிற்கு அப்பாவோடு சென்றூலும், அவனைப்பற்றி எல்லோரும் விசாரிக்க வாரம்பித்தார்கள். இதெல்லாம் ராமுவின் வந்து நின்று மறைந்தன. ராமு கண்முன் சுற்றுமுற்றும் பார்த்தான். பையன்களெல்லோரும் மைதானத்தை விட்டுப் போய்விட்டார்கள். உடனே எழுந்து வீட்டிற்குப் போகப் புறப்பட்டான். அப்பொழுது அவன்முன், அந்த சாயங்கால இருட்டில் ஓர் உருவம் தெரிந்தது. ராமு அதை உற்றுப் பார்த்தான். அதுவும் ராமுவை உற்றுப் பார்த்தது. உடனே ராமு, 'ஆ, மணீ! மணீ!!' என்று இருகைகளையும் நீட்டிக்கொண்டு அவனை நோக்கி ஓடினன். அவனும் அதே நிமிஷத்தில், 'ஆ ராமு, ராமு' என்று ஓடிவந்து, ராமுவை அணைந்துகொண்டான்.

(91-ம் பக்கத் தொடர்ச்சி)

'நாம் எல்லோரும் இந்த மாதிரி புடவையை எப்படி கட்டிக்கொள்கிறது? இது என்ன பரம விகாரம்' என்றூன் ஸ்ரீதரன்.

"எதற்கு இப்படி சொல்லுகிறீர்கள்? நான்கு மணிக்கு முன்னே எதிர் வீட்டுக் கமலா இந்த மாதிரி புடவை கட்டிக் கொண்டிருந்ததைப் பார்த்து சங்கரனும் நீங்களும் சிரித்துக் கொண்டிருந்தீர்களே" என்றூள் லீலா.

'அட பாவமே எனக்கு ஒன்றும் தெரியாதே' என்றூன் ஸ்ரீதரன்.

'எதற்குப் பொய் சொல்லுகிறீர்கள்! வாங்கிக் கொடுக்க முடியாது என்று சொல்லுங்களேன்' என்றூள் லீலா.

'உம்'......

'என்ன உம், நான் தான் ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டிருந்தேனே. நீங்கள் இருவரும் புடவையைப்பற்றிப் பேசிக்கொண்டு, சிரித்துக் கொண்டிருக்கும் போது'

'உம்'

'மறுபடியும் உம். புடவையும் விலைதீர்த்து விட்டேன். கமலா வாங்கியதைவிட இரண்டு ரூபாய் மலிவும் கூட' என்றூள் லீலா.

'அப்படியானல் வாங்கிவிடவேண்டியது தான்' என்றூன் ஸ்ரீதரன் வெகு பொறுமையுடன்.

'என்னமோ ஸினிமாவைப்பற்றி பேசிக் கொண்டிருந்தீர்களே? இன்றைக்கு என்ன ஸினிமா?' என்றூன் லீலா.

'என்ன ஸினிமாவோ தெரியாது.' என்றூன் ஸ்ரீதரன்.

'எதுக்கு இந்தப் புளுகு. நானும்கூட வருவதற்கே எல்லா வேலைகளையும் முடித்து விட்டேன்' என்றூள் லீலா.

ஸ்ரீதரன் பொறுமைக்கு எல்லை யில்லை. புதுப் புடவைக்கட்டிக் கொள்வது பாக்கியிருக்கிறதே! சீக்கிரம் கட்டிக்கொண்டு வந்தால் இன்றைக்கே போவோம். இல்லாவிட்டால் நாளைக்குப் போவோம்' என்றூன் ஸ்ரீதரன்.

ஸ்வேதாரண்ய ஆச்ரம பால பாடம் (1)

[கா. சி. வேங்கடரமணி]

பாடம் 2.

ஆடு	**மாடு**
பசு	**எருமை**
குதிரை	**கழுதை**
நாய்	**பூனை**

இந்த மிருகங்கள் எல்லாவற்றையும் நாம் வீட்டில் வளர்த்து, நம்முடைய தேவைகளுக்குப் பயன் படுத்திக்கொள்ளுகிறோம். நம்முடைய நாகரீகத்திற்கே இவைகள் இன்றியமையாதவை.

ஆடும், மாடும், குதிரையும் நம்முடைய கைவசம் வராவிட்டால் மானிட வாழ்க்கையே காட்டு வாழ்க்கையாய் நின்றுவிட்டிருக்கும்.

பசு, புல்லைத் தின்று நீரைக் குடித்தாலும், பாலைத்தான் தரும். அப்படியே, மணி, நீயும் பிறர்க்கு, அவர்கள் நன்மை செய்தாலும் சரி, தீமை செய்தாலும் சரி, எப்பொழுதும் நன்மையே செய்யவேண்டும். பரோபகாரம் முடிவில் உனக்கே பெரிய உபகாரமாய் வந்து முடியும்.

நமது நாட்டில் எருது இல்லாவிட்டால் உழ முடியாது. உழாவிட்டால் தான்யங்கள் விளையாது. விளைவில்லாவிடில் நாம் சாப்பிட்டு, ஜீவனம் செய்ய முடியாது.

ஆகையால்தான், மணி, நாம் பசுவைத் தெய்வமாகவும், தாய் போலும் நமது நாட்டில் கொண்டாடுகிறோம்.

இந்த மிருகங்களிடம், மணி, நீ எப்பொழுதும் அன்பாயிருக்க வேண்டும். கல்லாலும், கோலாலும், ஒருக்காலும் அடிக்கக் கூடாது.

மேல்கண்ட மிருகங்களின் உபயோகத்தை, மணி, நீ உன் நோட் புஸ்தகத்தில் நாளைய தினம் எழுதிக்கொண்டு வா.

இவைகளைப் போல், நாம் வீட்டில் வளர்க்கக்கூடிய இதர சில மிருகங்களின் பெயரைச் சொல்லு. அவைகளால் நாம் பெறும் பயனையும் கூறு.

தமிழ் வருஷப் பிறப்பு

[எல். என். குபீல் சுந்தரேசன், திருச்சினாப்பள்ளி]

ஹிந்துக்கள் கொண்டாடும் எல்லாப் பண்டிகைகளிலும் புது வருஷ நாள் மிகவும் விசேஷமானது. அந்நாள் மிகவும் புனிதகரமான நாளாகக் கருதப்படுகிறது. அன்றைய தினம் அதி காலையில் எழுந்து ஸ்நானம் செய்வர். தமக்குத் தோல்வியை தரக்கூடிய எக்காரியங்களிலும் அன்று பிரவேசிக்கமாட்டார்கள். அன்று அவர்களுக்கு ஏதேனும் ஒரு தோல்வி ஏற்படின் வருஷ முழுவதும் அம்மாதிரித் தோல்விகள் ஏற்படும் என்பது அவர்கள் நம்பிக்கை. ஆடவர், பெண்டிர், குழந்தைகள் எல்லோரும் அன்று நல்ல ஆடைகள் அணிந்துகொண்டு குதூகலமாகச் சாப்பிடுவார்கள். அன்று சாயங்காலம் கிராமவாசிகள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட இடத்தில் கூடுவர். பிற்பாடு சாஸ்திரிகள் ஒருவர் அப் புது வருஷத்திய பஞ்சாங்கத்தை வாசித்துக் காட்டி விளக்குவார். அதன் பின்பு, மாங்காய், வெள்ளரிக்காய் முதலியவைகள் உண்பதற்குக் கொடுப்பர். சில இடங்களில் சங்கீதக்கச்சேரி முதலியவைகளும் நடப்பதுண்டு. சிற்சில இடங்களில் இப் பண்டிகையை ஆடம்பரமாகக் கொண்டாடுகிறார்கள். மலபார் முதலிய இடங்களில் உள்ள மிராசுதார்களும், தனவான்களும் அன்று புதிய ஆடைகள் உடுத்திக் கொண்டு தம் வேலைக்காரர்களுக்கும் ஆடைகள் இனாமாக வழங்குவர். அன்று கோவில்களில் அர்ச்சனைகள் வெகு விமரிசையாகச் செய்யப்படும். முக்கியமாக கிராமாந்தரங்களில் தான் இது நன்கு கவனிக்கப்படும். சில இடங்களில் சுவாமியை ஊர்வலம் கொண்டு போவர். ஆனால் இவைகள் எல்லாவற்றிலும் "பஞ்சாங்க சிராவணம்" தான் மிகவும் முக்கியமானது. இந்தப் பஞ்சாங்க சிராவணம் கொண்டாடினால் தமக்கு நன்மை விளையும் என்பது அவர்களுடைய நம்பிக்கை.

திதி, வாரம், நக்ஷத்திரம், யோகம், கரணம் என்ற இவ்வைந்தும் அங்கங்கள் என்று சொல்லப்படும். சாஸ்திரங்களில், ஹிந்துக்கள், அதிலும் முக்கியமாக பிராமணர்கள், இவ்வைந்து அங்கங்களை கவனிக்க வேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. ஆனால் இதைக் காலப் போக்கில் யாரும் சரியாகக் கவனிப்பதில்லை. அதனால்தான் "பஞ்சாங்க சிராவணம்" ஏற்பட்டிருக்கிறது.

ஹிந்துக்கள் பண்டிகையைக் கொண்டாடுவது மிகவும் க்ஷீணித்த இந் நாளில், இம்மாதிரியான பண்டிகை தினங்களில் ஒரு இடத்தில் ஒற்றுமையாக எல்லோரும் கூடி, பண்டிகையை விமரிசையாக நடத்துவது தேச மக்களின் முன்னேற்றத்திற்கு அறிகுறியென்றே சொல்ல வேண்டும்.

நேர்த்தியான

: கலர் :

பிரிண்டிங்குக்கு

●

ரவி பிரிண்டர்ஸ்

●

156, பிராட்வே,

Post Box No. 248.

மதராஸ்.